# நடியின் பூஜை

ரவீந்திரநாத டாகுர்

UNIVERSITY EXTENSION LIBRARY
11 NOV 1964
MADURAI
Univ. Grants Commission

விற்பனை உரிமையாளர்கள்

ஸ்டார் பிரசுரம்

சென்னை-5 :: மதுரை

முதற் பதிப்பு: மே 1956.
உரிமை பெற்றது.
விலை ரூ. 1/4

ரவீந்திரநாத டாகுர் எழுதிய

"நடீர் பூஜா", "முக்ததாரா", "ராஜா",
"சாண்டாலிகா" என்னும் வங்க நாடகங்களின்
கதைச் சாரத்தை இங்கு தமிழில் எழுதி வெளியிட்டோர்

ஆ. கந்தசாமி, விஷாரத், எம். ஏ.,
சென்னை-21.

நவபாரத் பிரஸ், சென்னை-1.

# முகவுரை

ரவீந்திரநாத டாகுர் வங்கத்தில் கூவிய மகாகவி; பெரும் நாடகாசிரியரும் கூட. அவருக்கு நோபல் பரிசையும் உலகப் புகழையும் வாங்கிக் கொடுத்தது கீதாஞ்சலி என்ற கவிதைத் திரட்டேயானலும், அவரது நாடகங்களிலும் அதற்கீடான தத்துவங்களும் நொய்வும் இசையும் உள்ளன. அவரது சில நாடகங்களில் எல்லையற்ற அர்த்தம் நிறைந்து கிடக்கிறது. இத்தகைய நான்கு நாடகங்களின் வங்க மூலத்திலிருந்து கதைச் சாரத்தை மாத்திரம் பிழிந்து தருகிறேன் இச்சிறுநூலில்.

டாகுரின் நூல்களை மொழி பெயர்ப்பதில் முனைந்த ஓர் ஆசிரியர், "டாகுரது போன்ற கருத்துப் பிம்பங்கள் ததைந்த எழுத்துக்களை மொழிபெயர்ப்பது கவர்ச்சியும் சந்தோஷமும் மிக்கதானாலும், மிகவும் சிக்கலான வேலை," என்றார். மொழிபெயர்ப்பே இந்தப் பாடென்றால், அவைகளின் கதைச்சாரத்தை எடுத்து விளக்குவதன் கஷ்டம் வெளிப்படை. எனினும், அதிகம் பழக்கப் படாத இந்நாடகங்கள் பெரும் எண்ணக்கற்றைகள் கொண்டிருப்பதால், பணியின் கஷ்டத்தையும் பாராமல் அதில் இறங்கினேன்.

"நடியின் பூஜை"யின் மூலம் "நடீர் பூஜா" என்ற நாடகம்; 1927ல் எழுதப்பட்டது. இது சரித்திர வரலாற்றைச் சார்ந்திருந்தாலும், சரித்திர நாடகமல்ல. இதன் முக்கிய கவர்ச்சி —மனிதப் பண்பை ஆழத் தொடுவதிலும், ராணி லோகேஸ்வரியின் குணசித்திரத்திலும் தான்.

கதையின் மையமாகத் துளங்கும் தெளிவான பக்திக் கிளர்ச்சி இறுதித் தியாகத்தை எட்டும் போது மிகுதியிலும் தகுதியிலும் மெத்தச் சிறந்தொளிர்கிறது. வேதங்கள் தவரு உண்மை

கொண்டதென்பதையும், அது கற்பித்த பிராமணர் பெருமையையும் மறுத்தவர் புத்தர். கடவுள் பக்தியும் பூஜையும் ஒரு ஜாதியின் உரிமையாகாது. ஜாதிக்கு ஜாதி உயர்வு தாழ்வு இல்லை. மனிதத்துவத்தின் கண்ணியம் ஒவ்வொரு உயிரிலும் இருக்கிறது. சமூக ஸ்தாபனங்களும் கட்டுப்பாடுகளும் இந்த மூலதத்துவத்தை முடக்கிவிட்டு, உயர்வு தாழ்வு என்னும் செயற்கை முறைகள் வகுக்கின்றன. ஆனால் உண்மையான மதம் இச்செயற்கை வேறுபாடுகளை விலக்கிவிட்டு, மூலக் கொள்கையைத் தெளிவு படுத்தி நிலை நிறுத்தும். உண்மைக்குத் தியாகமே உயர்பக்தி—ஞானி ஞானத்தையும், கவிஞன் கவிஞத்துவத்தையும், நடி தன் நடனத்தையும் உண்மைக்கு சமர்ப்பிக்கிறார்கள். ஆம், ஏழை நடி தன் பக்தியாலும் நேர்மையாலும் ஜாதியின் எளிமையிலிருந்து எழுந்து தியாகத்தின் சிகரத்தில் தன் ஆத்மீகப் பெருமையைக் காட்டுகிறாள்.

கதையின் மறுகவர்ச்சியான லோகேஸ்வரியின் குணசித்திரத்தில் வைதீக இந்து மதத்திற்கும் புத்தமதத்திற்குமான போராட்டம் புனையப் பட்டிருக்கிறது. புத்தர் மீது அவளுக்குள்ள நிஜப்பற்று ஒருபுறம் இழுக்க, மறுபுறம் மனிதத் தன்மை கொழிக்கும் தத்துவங்களாலே மனித உறவுகளையும் பாசங்களையும் மிதித்து அழித்து இந்து சமூகத்தின் ஒழுங்கைக் குலைக்கும் புத்த மதத்தை எரிந்தாள். இந்த குணசித்திரம் ஒரு சீரிய சாதனையாகும்.

**1886** க்கு முன் தான் எழுதிய நாவல் ஒன்றைத் தழுவி 1909-ல் "பிராயஸ்சித்தா" என்ற நாடகத்தை எழுதிய டாகுர் அதையே 1922-ல் "முக்ததாரா"வாகத் திருப்பி எழுதினார். தன் அரசியல் கொள்கைகளை இங்கு முழுதீவிரத்துடன் நேரடியாகச் சொல்லிக் காட்டுகிறார். எந்திர சாதனங்களைச் சார்ந்த அரசாங்கத்தின் மீது அவருக்குள்ள ஆழ்ந்த அவநம்பிக்கை; பலாத்காரம் கொடுங்கோன்மைக்குப் பணிபுரியும் விஞ்ஞானம், இனவெறுப்பு, ஏகாதிபத்திய வெறி, இவற்றின் மீது அவருக்குள்ள வெறுப்பு; சுதந்திரத்தில்தான் கடவுள் தரிசனம் கிடைக்கும் என்ற அவர் நம்பிக்கை; எல்லாம் நன்கு

கோர்க்கப்பட்டு வானவில் போல் நம்மைக் கவர்கின்றன. இங்கு வரும் தனஞ்சயனின் தோற்றமும் போதனைகளும், பின் இந்திய சுதந்திர இயக்கத்தைத் தாங்கி நடத்திய காந்திஜீயின் மகாத்மியத்தை நன்கு பிரதிபலிக்கின்றன. டாகுரின் இந்த தீர்க்க தரிசனம் இணையற்ற சாதனையாகும்.

அரசியல் தத்துவங்களுக்கிடை பின்னப்பட்ட கதையின் உயிர்த்தொனியாக ஓடுகின்றன முக்ததாரையும் அதனோடு பின்னப்பட்ட இளவரசனின் வாழ்க்கைப் போக்கும். எனவே முக்ததாரை கட்டப்பட்டபோது தான் கட்டப்பட்டதாகவே உணர்ந்த இளவரசன் இறுதிப் பணியாகத் தன்னையே தியாகம் செய்து தன் உயிர்ப்பிணைப்பான அருவியை விடுவித்த கட்டம் மனித சக்தியின் உச்ச ஜோதியாய் நம்மைத் திகைக்க வைக்கிறது. இத்திகைப்பில் சிவத்திரை மக்களின் கதி என்னவாயிற்று என்று கேட்கக் கூட மறந்து விடுகிறோம். ஈசனில் ஒன்றுபடும் பக்தன்போல், தன் உயிர்ப்புச் சக்தியும் ரகசியமுமான அருவியில் இளவரசன் ஒருமியதும், அதுவே இறுதி, அதுவே பயன், அதுவேசாதனை என ஒப்புக்கொண்டு, அதற்கு மீறி நம்நெஞ்சம் எதுவும் வினவுவதில்லை. அந்த உண்மைக்கு விளக்கமோ விமர்சனமோ தேவையில்லை.

மூன்றும் கதை "மன்னன்" 1910 ல் எழுதப்பட்ட "ராஜா"வின் சாரம். கருத்தைக் கவரும் கதைப் பொருள் கொண்ட இதில் மனித உள்ளத்தோடு கடவுள் தொடரும் நடவடிக்கைகளைச் சித்திரிக்கிறார் டாகுர். "இருட்டறை மன்னன் கடவுள். பிறரிடமிருந்து நம்மைப் பிரித்து, நம் அளவடக்கம் எழுப்பிய சுவர்களுக்கிடை நாம் இருட்டறையில் சிறைப்பட்டிருக்கிறோம். அவ்வறைக்கு வெளியில் எங்கும் வெளிச்சம். திடீரென்று நாதன் தரிசனம் பழக்கப்படாத நம் கண்களுக்குக் கிடைத்தால், தானென்ற உணர்ச்சியில் ததும்பிக் கிடக்கும் நம் உணர்வில் அவன் சட்டென்று புகுந்தால், நம்மைத் திகிலூட்டி நம் உணர்ச்சியைக் கலக்குகிறது. அவனது அளவற்ற ஜோதி நம் கண்களைப் பறித்துக் கலக்கும். உலகின் பரந்த வெளிச்சத்தில், உல்லாச புரங்களில், பொருள்களிடை

ஒரு பொருளாக அவனைக் காண விரும்பினுள் ராணி; அது பொய்த்தது. அவ்வாறு அவனை அவள் அடைய முடியவில்லை," என்று மிகத் தெளிவாக இந்நாடகத்தின் தத்துவத்தை எடுத்துரைக்கிருர் தத்துவஞானியும் இன்றைய இந்திய உபராஷ்ட்ர பதியுமான டாக்டர் ராதாகிருஷ்ணன்.

தன்னையும் தன் உடைமைகளையும் சமர்ப்பிக்க வேண்டுகிறது கடவுள் சேவை என்னும் சீரிய உண்மையைக் கையாளும் இந்நாடகம் குறியீட்டுக் கொள்கை (Symbolism) யின் முழு முதிர்ச்சி என்கிருர் எட்வர்ட் தாம்ப்ஸன். உண்மையில் இது உலக நாடகத்தின் சிறந்த உவமைக்கதை.

புத்தர் பற்றிய கதையொன்றை ஆதாரமாகக் கொண்டாலும், 1933ல் எழுதப்பட்ட "சாண்டாலிகா"வில் சீரிய திரிபுகளுடன் டாகுர் தார்மீகப் போராட்டத்தின் மனேதத்துவத்தைச் சித்திரிக்கிருர். பிறப்பால் தாழ்ந்த ஈனஜாதியைச் சேர்ந்த ஒரு பெண், புத்த பிக்ஷுவின் அன்புச் செயலால் தனது முழு உரிமைகளையும் உணர்ந்தெழுந்தாள். ஆனுல் அவ்வுணர்ச்சியின் அத்துமீறிய அலங்கோலத்தின் அவலத்தை இறுதியில் கண்டாள். ஆம், தன்னுணர்வு தேவை தான் மனித வளர்ச்சிக்கு; அதுவும் ஓரளவுக்கே. தன்னின், தன் தொழிலின் பெருமையை உணராது சேவைக் களத்தில் பிரவேசிக்க முடியாதுதான். ஆனுல் மதுப்போல் போதை தரும் இப்பெருமை—தற்பெருமை—கட்டுப்படுத்தப் படாவிட்டால், தன் உரிமைகளை வற்புறுத்தும் தோரணையில் ஒருவன் பிறர் உரிமைகளை ஆக்கிரமிக்கக் கூடும். புத்துணர்ச்சி பெற்ற ப்ராக்ருதி பிக்ஷுவிடம் சமர்ப்பணம் ஆக விழைந்தாள்; ஆனுல் அவன் அவளை அங்கீகரிக்க வேண்டியதில்லை—அந்த உரிமை அவனுக்கு உண்டு என்பதை மறந்தாள். இந்தப் பிழைப்பின் விளைவுத் துயரே இக்கதையின் உயிர்ச்சாயை.

இறுதியாக இக்கதைகளைத் தமிழில் வெளியிட அன்புடன் அனுமதியளித்த "விஸ்வபாரதி" யினருக்கு நன்றி தெரிவிக்க நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

— ஆ. கந்தசாமி

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | நடியின் பூஜை | 9 |
| 2. | முக்த தாரை | 22 |
| 3. | மன்னன் | 46 |
| 4. | சண்டாளி | 66 |

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

# நடியின் பூஜை

அன்று வசந்த பௌர்ணமி. புத்தன் பிறந்த புனிதநாள். அந்த உற்சவத் திருநாளில் புத்த பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் தெருவெல்லாம் புத்த கீதம் முழக்இக் கொண்டு சென்றனர். அன்று சாயந்திரம் அரண்மனை ஸ்தூபத்தில் நடக்க விருந்த புத்தன் பூஜைக்கு, துறந்து ஊருக்கு வெளியில் ஆசிரமம் கொண்டமன்னன் பிம்பிசாரன் வரவிருந்தான். உற்சாகம் ஊரெல்லாம் பொங்கி வழிந்தது.

லோகேஸ்வரி பிம்பிசாரன் மனைவி. ஆனால் மன்னன் துறந்த போது அவள் துறக்கவில்லை. காரணம் புத்தமதத்தில் அவளுக்கு பற்றில்லை என்பதல்ல. முதன் முதலாக புத்தன் கொள்கையில் மனம் பறி கொடுத்தவள் அவள்தான். தினமும் பிக்ஷு தர்மருசியை அரண்மனைக்கு அழைத்து புத்தன் வேதவாக்கைக் கேட்டுப் பின்னரே நீர் பருகுவாள். தினமும் நூறு பிக்ஷுக்களுக்கு விருந்தூட்டியே அவள் உண்பாள். புத்த சங்கத்தின் உறுப்பினர் அனைவோருக்கும் ஆண்டுதோறும் காவி உடை வழங்குவது அவள் வழக்கம். புத்தன் எதிரி தேவதத்தன் எதிர்ப் பிரசாரம் பெருக்கியபோது,

தலைசிறந்த புத்த சிஷ்யர்களை அழைத்து அரண்மனை அசோகமரத் தடியில் மதோபதேசம் செய்விப்பாள். மன்னன் பிம்பிசாரனும் புத்தன் வாக்கில் சுத்தம் கண்டான்.

ஆனால் அவர்கள் மகன் அஜாதசத்துரு தேவதத்தன் வசப்பட்டான். மதத்தோடு அரசியல் நோக்கமும் கொண்ட அஜாதசத்துரு தேவதத்தன் பலத்தால் நாட்டைக் கைப்பற்ற கருத்துக் கொண்டிருந்தான். லோகேஸ்வரி நினைத்தாள்—இளவரசன் உடைந்த படகில் ஓலக்கடல் தாண்டுவதா? புத்தன் கருணையில் மன்னன் காக்கப்படுவான், என்று. எனவே புத்தனை அழைத்து மன்னனை ஆசிக்க வேண்டினாள். புத்தன் ஆசித்தான். மன்னன் மனம் நெகிழ்ந்தது; துறவின் மேன்மையை உணர்ந்து, அஜாதசத்துருவிடம் நாட்டை விட்டு விட்டு, நகரத்திற்கு வெளியே ஆசிரம வாசம் பூண்டான். அதையடுத்து அடுத்த மகன் சித்ரா அரண்மனையை விட்டு பிக்ஷு வேஷத்தில் கிளம்பினான்.

லோகேஸ்வரி மனதில் கிளர்ச்சி மூண்டது. தான் வளர்த்த மதம் தன்நெஞ்சிலே பாய்வதா? தன் கணவனையும் மகனையும் பறிப்பதா? கணவன் உயிரோடிருக்க விதவையாயும், மகனையீன்றும் வறண்டவளாயும், அரண்மனையிலிருந்தும் இல்லமற்றும், தான் வாழும் நிலையில் மனக்கொதிப்புக் கொண்டாள். துறந்த சித்ரா பேரையும் மாற்றிக் கொண்டான், தாயிட்டபேர் களங்கம் நிறைந்ததுபோல. அன்றிருந்து இன்றுவரை அவனைக் காண வரவுமில்லை. இம்மதத்தின் விஷத்தன்மையைப் பார். மகன் தாய் மடியை விட்டு ஓடுகிறான்.

மன்னன் காய்ந்த இலைபோல சிம்மாதனத்திலிருந்து விழுகிருன். இவர்கள் தேடிச் செல்லும் சூனியத்தைவிட இரத்தமும் ஊனும் அர்த்தம் வாய்ந்தவை இல்லையா? வெறுத்து ஓடும் துறவு வெறுமையன்றி வேறென்ன? புத்தர் மதம் ஆண்மதம்—அதில் மகனுக்கு தாய் தேவையில்லை; கணவனுக்கு மனைவி தேவையில்லை. பெண்கள் துறக்கப்பட்ட வீடுகளில் உடைந்த வாழ்வைப் பற்றி, வீடு துறந்த வேதாந்திகளுக்கு பிச்சை கொடுக்க வேண்டும். இது பெண்களின் சாவுமதம். ஆனல் பெண்களுமன்றே புத்த பூஜையில் கிளம்பிவிட்டார்கள்! முட்டாள்கள்! விளக்கில் பாயும் விட்டில்கள்!

அஹிம்சையாம் அஹிம்சை! இழிந்தோரின் வார்த்தையன்ரோ அது. க்ஷத்திரியனின் கையலங்காரம் பலம், பயமும் திறனும் ஒருங்கே நிறைந்த பலம். களிமண்ணில் பானை செய்யலாம்; ஆனல் மாண்புமிக்க மலை இறுகிய கல்லாலன்ரோ அமையவேண்டும்! புத்தமதம் எல்லாவற்றிலும் சாத்வீகக் களிமண்ணைப் புகுத்துகிறது. மன்னன் நாடு துறந்தால், ஆளுங்கடன் யாரைச்சாரும்? வீரர்க்காகப் படைக்கப்பட்ட இவ்வுலகில், எல்லாம் காவி நிறமானலும், ஜொலிப்பை எங்கே காண்பது? தலை வணங்கி உடல் சுருங்கினல், கடமை மகுடம் தாங்குவதெப்படி? ஆண்தான் ஆண்மையை மறந்து ஓடினல், பெண்களன்ரோ மாற்று புகுத்த வேண்டும்! பெருங் கொடிகள் படர, பெருமரங்கள் வேண்டும். மரங்களெல்லாம் புதர்க் குச்சிகளாக மாறினல், கொடிகளின் கதி? புத்தன் கிளம்பினன் இம்மரங்களை ஒழிக்க—பரசுராமன் போல் கோடாளி ஏந்தி அல்ல. சாத்வீகப் புழுக்களால் அரிக்கிருன் ஆண்மையின் சத்தை; தடுக்க

பெண்மை இன்னும் எழவில்லை. இந்த மதத்தின் பாலை வனக்காற்று வறட்சியை வீசி எல்லாவற்றையும் சுருக்கு கிறது, கருக்குகிறது. பின் சத்து தழைப்பது எங்கே?

ஆனால் நல்லவேளை, அஜாதசத்துரு இந்த புத்த பூஜையைத் தடுத்துவிட்டான். புத்த மதத்தின்மீது தேவதத்தன் துணைகொண்டு போர் தொடுத்தான். லோகேஸ்வரிக்கு அதில் ஓர் மகிழ்ச்சி. ஆனால் புத்தர்கள் தங்கள் உற்சாகம் தணியாமல் தெருவெல்லாம் கீதம் முழக்கித் திரிந்தார்கள்; பிம்பிசாரனும் பூஜைக்கு கிளம்பி வந்துகொண்டிருந்தான்; பிரதம பிக்ஷுணி ஊரையே திரட்டி பூஜைக்கு பிரமாத ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந் தாள்.

லோகேஸ்வரியின் புண்பட்ட மனதில் கொந்தளித் துக் கொண்டிருந்த எண்ணங்கள் அவள் கூட்டின் பகுதி யைச் சேர்ந்தவை. ஆனால் புத்தனை நேரே கண்டு தரி சித்து அவன் தூய்மை தன்னைத் தொட்டதன் விளைவான சாந்த பாகம் இன்னும் அவளியல்பிலிருந்து தேய்ந்து போய்விடவில்லை. தன் குடும்பத்தைப் பிளந்த கோபமே யன்றி, உள்ளம் புத்த உண்மையை ஒப்பத்தான் செய் தது. தெருவில் முழங்கிக் கேட்டது புத்த மூலவாக்கு:—

**"புத்தனே சரணம்;**
**தர்மமே சரணம்;**
**சங்கமே சரணம்."**

அறியாதே தலைவணங்கினாள் லோகேஸ்வரி. அருகி லிருந்த இளவரசி மல்லிகா "இதென்ன!" என்று வியந்தாள்.

இவ்விடை, மகன் சித்ரா தன்னைக் காண வந்திருப்பதை சேவகி வந்துசொல்ல, லோகேஸ்வரி புளகாங்கிதம் அடைந்தாள். புத்தகீதம் கேட்டு வெளியேறிய மகன் தான் புத்தகீதம் கேட்ட அளவே மீண்டு வந்தது அவளது பக்தியை ஸ்திரப்படுத்தியது. தாய்ப் பாசம் தவ்வியது. ஆனால்......அவள் மகன் சித்ரா அவளிடம் வந்தான்; ஆனால் அவள் மகனாக அல்ல. அவளை விசித்திரமாகப் பார்த்தான், தாய் என்றே நினைக்காமல். அவன் தூய ஒளி அவளை வெட்கப் படுத்தியது; அவள் தாய்மைக் கிடையில் புகுந்தது. அவள் அவனுக்கு கொடுத்த உயிருக்கும், அவன் பெற்ற புத்துயிர்க்கும் என்னபேதம்! ஒன்றை ஒன்று சீறியது. அவள் தாயன்பிற்கு இடமறப் போயிற்று. அவனை வேண்டினாள்—“ஒருநாள் உன் தாய் வீட்டில் தங்கு” என்று. “என் தாயின் வீட்டிற்கு வானமல்லது கூரை இல்லை” என்று விட்டுப்போனான் அவன். அந்த இடிச் சொற்கள் அவளை நெஞ்சுவரை இடித்தன.

அவள் இந்த கலக்கத்தில் இருக்கும்போது இளவரசிகள் ரத்னவளி, வாசவி, நந்தா, அஜீதா, பத்ரா வந்தார்கள். “தெருவில் கிளம்பும் இந்த புத்தகீதத்தை நிறுத்துங்கள்” என்று கத்தினாள் லோகேஸ்வரி காதை அடைத்துக் கொண்டே. கேலி நகையோடே ரத்னவளி சொன்னாள்—“அம்மா, விமோக்ஷனம் பிறப்பிக்கும் இக் கீதம் நன்கு கேட்கட்டும். நாங்கள் கூட எங்கள் மனதைப் புதுப்பிக்கிறோம் ஸ்ரீமதியின் உபதேசத்தில்.”

“என்ன, ஒரு நர்த்தகியின் சிஷ்யைகளா நீங்கள் இளவரசிகள்? ஜாதி வரம்பற்ற இம் மதத்தில் பிராம

ணன் பணிவான், க்ஷத்திரியன் தாழ்வான்; ஆனால் ஈனர்கள் எழுவர். புத்தன் வந்த அன்று அவனைக் காணவும் தகுதியற்றிருந்த நர்த்தகி ஸ்ரீமதி இன்று உங்கள் குரு, புத்தனின் புண்யத்தூதுவள். வரும் பிக்ஷுக்கள் இளவரசிகள் கைப்பிச்சை கேட்ட காலம் மாறி, "ஸ்ரீமதி எங்கே?" என்று கேட்கிறார்கள். நீங்கள் இளவரசிகள் சோதைகள்போல் சிரிக்கிறீர்கள். பிச்சைக்காரர்கள் உங்கள் சிம்மாதனத்தைப் பற்றிக் கொள்வார்கள், ஜாக்கிரதை," என்று உணர்ச்சி பெருக்கினாள் லோகேஸ்வரி.

மல்லிகா, "அம்மா, ஆகாயத்தில் பலவிதக் காற்றுகள் வீசுகின்றன. சூதாட்டமன்றி வேறு தொழிலறியாத கலந்தகன் பிக்ஷுவாகி விட்டான் திடீரென்று. பிராமண கொடையில் சிறந்த நந்திவர்மன் இன்று பிராமணர்களைக் கடிந்து பார்க்கிறான். இக்காற்று வாசனை விசித்திரமாயிருக்கிறது," என்று இடையிட்டாள்.

ரத்னவளி அதற்கொத்துப் பாடினாள், "அம்மா, பாருங்கள் காலத்தின் கோலத்தை. இன்றைய புத்தன் திருநாள் பூஜையை நடத்தி வைக்க ஸ்ரீமதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாளாம். யாரால்? அம்பட்டன் உபாலி, கோழை சுனந்தன், குறவன் புக்குஷ் இவர்களடங்கிய குழுவால். இந்த பக்தி நாடகத்திற்குத் தாக்கமாய் இளவரசிகள் வாசவி, நந்தா, அஜீதா, பத்ரா நடியின் காப்புமாதுகளாய் செல்லப் போகிறார்களாம்," என்று.

ஆனால் வாசவி "சும்மா இரடி. உனது தீப்பொறிப் பேச்சு அந்தப்புரத்து அசோக மரத்தை எரித்துவிடாது;

ஸ்ரீமதி மனதையும் கருக்கி விடாது,'' என்று குறுக்கிட்டாள்.

ரத்னுவளி பதிலுக்கு வீறிட்டாள்: "பாரம்மா இவள் பேச்சை. நான் ஏன் ஆணுய்ப் பிறக்கவில்லை? வளையல் தங்கும் கையில் வாள் வந்தால் எவ்வளவு பிரயோஜனம்!''

"என்ஞல் தாங்க முடியாது இவ்வேதனை. நான் என் அறையில் அடைபட்டுக் கொள்ளப்போகிறேன்,'' என்று லோகேஸ்வரி வெகுண்டு கிளம்பிஞள். பூஜை தயாரிப்புக்காக வாசவி, நந்தா, அஜீதா, பத்ரா எழுந்து போயினர். ரத்னுவளியும் மல்லிகாவும் கோபத்தில் சில பேசிவிட்டு நகன்றனர்.

அரண்மனைத் தோட்டத்தின் ஓர்புறம் நடி ஸ்ரீமதி வீணை ஏந்திய கையுடன் ஓர் கொடி நிழலில் அமர்ந்திருந்தாள். புத்தன் திருநாளின் மகிமை அவள் மனதை லாகவப்படுத்தியது. பக்தி பரவசத்தில் பாடிஞள்:

''இரவின் நள்ளிருட்டில்
எட்டிய முணுமுணுப்பு—அவனதே!
தெருவில் சென்றிடினும்
சிற்றில் இருந்திடினும்—கேட்குதே!
வருவாய் என்றழைக்கும்
மாய முணுமுணுப்பு—அவனதே!''

அவள் மனதில் எழுச்சி மிகுந்திருந்தது. நடியான அவளை நாணமின்றி தலை நிமிர்த்திய புத்த போதனை மாண்புடையது! அவன் முணுமுணுப்பில் அவள் உள்ளம் தூய்மை பெற்றது. அவளுக்கு ஞாபகம் வந்தது.

அன்று புத்தன் அரண்மனைக்கு வந்தபோது, அவள் அவனைத் தரிசிக்க செல்லவில்லை. அன்று அவள் தூய்மையற்றிருந்தாள்; அவள் உள்ளம் காணிக்கைக்குத் தயாராகவில்லை. அவனைக் கண்ணுல் கண்டால் மாத்திரம் தரிசனம் ஆகிவிடுமா? அவன் மொழிகள் காதுக் கர்ண பேரிகையில் பட்டால் மாத்திரம் விளங்கிவிடுமா? அந்நிலையில் அவன் முன் தன்னை எடுத்துச் செல்ல அவள் விரும்பவில்லை. ஆனால்...அவள் பாக்கியம், அவன் கருணை — அவனே அவள் மனதில் நுழைந்து அதைத் தூய்மைப்படுத்தினன். அங்கிருந்து அவளை அழைத்தான். உடனே மறைந்திருந்த மலர்கள் காய்ந்த கொப்பில் தளிர்த்துக் கிளம்பின. அவன் மறுபடி அழைத்தான். ஞானேதயம் கையில் ஒளிக்குடம் தாங்கி உதித்தது; இருள் அகன்றது.

இன்று அவள் பாக்கியம்! புத்த ஸ்தூபத்திற்கு பூஜை பாராட்டுவது அவள் பொறுப்பாகக் கொடுக்கப் பட்டது; இன்றுவரை இளவரசிகளின் தனி உரிமையாக இருந்த புண்ணியம் அவள் கையில் புகுந்தது. பூஜை விளக்குகள் இளவரசிகளின் கையில் புகைத்தனவே யன்றி, பொன்னெளி பெருக்கவில்லை. ஆகவே புத்தர் குழாம் அவ்விளக்குகளை எளியாள் கையில் இறுத்தது. அவள் ஸ்தூபத்தைக் கழுவி புனிதப்படுத்தி பூஜைப் பாண்டங்களைத் தயார்ப்படுத்தவேண்டும். அவளுக்குத் துணையாக வாசவி வர மிக விரும்பினுள்; ரத்னுவளி யின் கோபத்தையும் பாராட்டாமல் நடியுடன் சென்ருள்.

தெருக்களில் புத்த கீதம் கிளம்பியது. போட்டிக்கு தேவதத்தன் குழாம் சிவன் குரல் எழுப்பிச் சீறியது.

அரண்மனை ஸ்தூபியையும் தகர்த்துத் துடைத்தெறிந் தது. மன்னன் கட்டளைப்படி புத்த பூஜை தடுக்கப்பட் டது. அரண்மனைத் தோட்டத்திற்குள் அனுமதி மறுக் கப்பட்டது.

அன்புப் பெருக்கில் ஸ்ரீமதி மாதர் சிலருடனும் இள வரசிகளுடனும் பூஜை விளக்குகள், வாசங்கள், மலர்கள் முதலியவற்றுடன் வந்தாள். ஆனுல் பாதை அடைபட்டுக் கிடந்தது. பெண் காவலர் சிலர் வந்து, அவளைத் திரும் பிப் போகச் சொல்லினர். அரசன் கட்டளையைக் கூறி, "பூஜை தடுக்கப்பட்டிருக்கிறது. பூஜைக்கு விளக்கேந்தி வந்தாலோ, கீதம் பாடினுலோ மரணதண்டனை மல ரும்...மேலும் பலனென்ன, புத்த ஸ்தூபி இடிக்கப்பட்டு அழிந்துவிட்டது; பூஜை எப்படி நடக்கும்?" என்றனர்.

ஸ்ரீமதி நினைத்தாள் — "வாயில்வரை வந்த பின்னு மறுப்பு, என்ன துர்ப்பாக்கியம்! கோயில் கதவு பக்த னுக்கு பளார் என்று திறந்துவிடுவதில்லை. தாழ்ப்பாள் கொஞ்சம் கொஞ்சமாகவன்ருே தளரும். தேவன் ஆணை, நான் பூஜை செய்ய வேண்டுமென்பது; தடங் கல்கள் தானே தகரும். மன்னன் தடை எம்மாத்திரம், அவன் அதிகாரம் கோயில் கர்பகிரஹத்தில் செல் லாதே!"

தெருவில் கலவரக் குரல் அதிகரித்தது. நிலைமை யின் அபாயம் உணர்ந்து இளவரசிகள் விலகினர். ஆனுல் ஸ்ரீமதி பக்திக் கடமையில் திடமாக நின்ருள். அங்கேயே அமர்ந்தாள். தேவன் அழைப்பு நிச்சயம் வரும்; அதுவரை காத்திருப்பது அவள் கடமை !

மறுகிமிடம் அங்குவந்த காவற்சேவகி தெருவில் பிரதம பிக்ஷுணி கொலை செய்யப்பட்ட விபரம் சொன்னுள். ஸ்ரீமதியின் மனம் திடமிருந்தது. போராட்டம் வந்து விட்டது; ஹிம்சையின் கோலம் கிளம்பிவிட்டது. புத்தன் வாக்கு, அன்பு, பக்தி, அஹிம்சை அவற்றை வெல்ல வேண்டும்!

அடுத்து அங்கு வந்த ரத்னுவளி அவளிடம் கூறினுள்—“மன்னன் கட்டளை, நீ அசோகமரத்தடி ஸ்தூபத்தினருகே நடனமாட வேண்டும், பூஜை நேரத்தில்.” ரத்னுவளியின் கபடம், உட்கருத்து, ஸ்ரீமதியின் பக்தித் தலத்தில் படவில்லை. தேவன் முன் பக்திநடனம், பூஜை நடனம் என்ற நினைப்பில் ஆனந்தமாக ஒத்துக் கொண்டாள்.

மாலை நேரம். பூஜை நேரம் நெருங்கியது. நடன நேரமும் நெருங்கியது. ஆனுல் பிக்ஷுணி கொலையில் ஊர் கொந்தளித்தது. ஆசிரமத்திலிருந்து கிளம்பிவந்த மன்னன் பிம்பிசாரனும் கொல்லப்பட்டான். தேவதத்தன் சூழ்ச்சியில் ஹிம்சைக் கோலம் தாண்டவமாடியது.

பிரஜைகளின் எதிர்ப்பு அதிகரித்தது. ரத்னுவளி தன் சூழ்ச்சி நாடகத்தை சீக்கிரம் வெற்றிகரமாக முடிக்க துரிதப்பட்டாள். ஸ்ரீமதி கண்கவர் உடைகளாலும் மணிகளாலும் கழுத்தணி வளையல்களாலும் சிங்காரிக்கப்பட்டாள். திடமற்ற அஜாதசத்துருவின் மனம் மாறுமுன் அவன் கட்டளைக் கரத்தால் நடியின் நாசம் விளைவிக்க வேண்டும்—அதுவே ரத்னுவளியின் ஆவல்.

இதயப் பூரிப்பு எழிலில் எழில் மிகுக்க நடி வந்தாள். நடி தன் சிங்கார அலங்காரத்தில் கனவு நக்ஷத்திரம்

போலவும் கானல் நீர்க் காட்சிபோலவும் ஜொலித்தாள். மெதுவாக இசைத்தாள் :—

"வாழ்வே ! சாவே ! தேவா !
நீயே சரணம் !
தீயே எரித்(து)உன்
தீபம் என்தன் ஏற்ருய் !
நாணம் துடைத்து
மாணம் கொடுப்பாய் !

"நின்தாள் பட்டென் பண்பு
பொன்னே பூக்க !
இன்னே ஊக்கு,
என்தன் தூசி துடைத்து !
தீமை தொலைந்து
சேய்மை விளைக !

"தூரக் கடலின் தேவா !
தெருக்காற்(று) எகிறி
இருட்டாய் வெகுள,
யாரும் இல்லாப் பாதை;
உன்விளக் கேற்றி
என்வழி சாற்ருய் !"

சுற்றிலும் சிலி சிலிர்ப்பு சூழ்ந்தது.

நடி புத்தன் சந்நிதியில் ஆடப்போகிருள் என்ற உணர்ச்சி அனைவரையும் குலுக்கியது—தூய்மைத் தளத்தில் வேசி நடனமா? அவளே சம்மதித்து ஆடுகிருளாம்! அணிமணிகளுடன்! அரண்மனைச் சிங்காரம் அரு கோயிலிலா? இந்த மாசுக்கு மாற்றுண்டோ?

நடி நடன அசைவுடன் முன் நகர்ந்தாள்.

இடையில் வந்த மல்லிகா, ரத்னுவளியை அழைத்துச் சொன்னுள்—"மன்னன் கட்டளையை மாற்றி விட்டான். புத்த பூஜையை அனுமதித்துத் தெருவெல்லாம் பறைசாற்றுகிருன். ஊரார் சீக்கிரமே இங்குவந்து விடுவார்கள். ஏன், அவனே இங்கு பூஜைக்கு வர விருக்கிருன்."

"அப்படியா, சீக்கிரம் நம் நாடகம் முடிய வேண்டுமே! அல்லது வெண்ணெய் திரளும்போது பானை உடைந்த கதையாகி விடுமே! அம்மாவை எங்கே?... நல்ல வேளை. இதோ வந்து விட்டாள். இனி நடனம் ஆரம்பமாகலாம்," என்று மெய்சிலிர்த்தாள் ரத்னுவளி.

லோகேஸ்வரி வந்தமர்ந்தாள். இளவரசிகள், காவலர், மாதர் கூடிய அக் கூட்டத்தில் நடி ஸ்ரீமதி நடனமாரம்பித்தாள், பாடிக்கொண்டே:—

"தேவா உன் மன்னிப்பு வேண்டும் !
வாவா என்ற உன்னழைப்பு
தாவும்என் நெஞ்சத்தில் வாழ்வு
மேவ, உன்னை நாடியேஎன்
உடல்கீதம் எழுந்துசெய்யும் பூஜை;
உடல்கீதம் பரப்பட்டும் சாந்தம்!"

கம்பீரமான அபிநயத்தில் நின்ற வண்ணம் நடி நகை, வளையல், கழுத்தணிகளைக் கழற்றி எறிந்தாள்—பாசப் பட்டைகளை உரித்தெறிவது போல். ரத்னுவளியின் கோபம் கொந்தளித்தது. அரண்மனை நகைகளை அவமதிக்க இவளுக்கென்ன தெம்பு? "ஸ்ரீமதி! நகைகளைப் பொறுக்கி எடுத்து வை," என்று கட்டளை யிட்டாள்.

பக்தி பரவசப்பாவை இளவரசி கட்டளையிலா இருந்தாள்? தேவன் ஆணை, ஆடினாள். தேவன் கருணை, திளைத்தாள். இடையில் ரத்னாவளி யார்?

தொடர்ந்து பாடினாள்:—

"வாசமலர் பழங்கொணர வில்லை
பூசை உன்னைப் போற்ற, தேவ!
ஈசன் உன் தாள் சமர்ப்பிக்க தூய்நீர்
ஓசைக் குடமும் இல்லை; ஆனால்
உடல்கீதம் எழுந்துசெய்யும் பூஜை;
உடல்ஊறி உள்ளநீர்மிக்(கு) ஓடும்!"

ஸ்ரீமதி உடைகளைக் கழற்றி ஒவ்வொன்றாக வீசினாள், அவளைப் பற்றி நிற்கும் கடைசிப் பந்தங்களைப்போல். பார்! தூய காவி உடை எஞ்சி மிளிர்ந்தது. பூஜைவளம் தான்! மன்னன் கட்டளை உணர்ந்தும் மரண வாயிலில் கால் வைக்கிறாளே!

அழைப்புக் கிடைத்தபின் பிழைப்பதேது? பரவச பாவத்திலேயே ஸ்ரீமதி ஸ்மரித்து உச்சரித்தாள்—தலை வணங்கி:

"புத்தனே சரணம்!
தர்மமே சரணம்!
சங்கமே சரணம்!"

கடைசி வார்த்தை வெளிவந்த மறுகணம் ஸ்ரீமதியின் வணங்கிய தலை துண்டிக்கப்பட்டு விழுந்தது. மன்னன் கட்டளையை மீறி பூஜை நடத்தியதற்கு தண்டனையைக் காவலர் நிறைவேற்றினர்.

அதே கணம் பூஜை நிமித்தம் வந்த அஜாதசத்துரு, நடந்தது உணர்ந்து வாசலிலிருந்தே திரும்பிப்போனான்.

# முக்தி தாரை

உத்தரகூடம் ஒரு சிறு ஏகாதிபத்தியம். மன்னன் ராஜ்ஜீத்தைவிட மக்களின் ஏகாதிபத்திய வெறி மிகுந்திருந்தது. சிறு வயது முதல் உத்தரகூடத்தின் மேன்மை சிறப்பைப் போற்றுவதிலே கருத்தோடு வளர்க்கப்பட்டவர்கள். தங்களது எழுந்த மூக்கெலும்பு தங்கள் ஜாதியின் சிறப்பின் சின்னம் என்று புத்தி புகட்டப்பட்டவர்கள். சிறப்பின் பயன் பிறரை வென்று அடக்கி ஆள்தல் என்ற கருத்து ஊறியவர்கள். சரித்திரத்தில் என்றும் உத்தரகூடம் தோல்வியுற்றதில்லே. முன்னுளில் மன்னன் பிரகஜீத் 293 போர்வீரர்களேக் கொண்டு எதிரியின் 31793 வீரர்களே சின்னுபின்னப் படுத்தியது பொன்னேடுகளில் பொறிக்கப்பட்டுள்ள புகழ்ச் செய்தி. வேற்றுரென்றுல் வெறுப்பதும் வெல்வதும் தேசபக்தியின் முதல் தத்துவம் உத்தரகூடத்தில்.

நில அமைப்பின் காரணமாக சிவத்தரை உத்தரகூடத்தின் அடிமையாக அமைந்தது. சுற்றும் மலேப்பாங்கான உத்தரகூடத்தால் சூழப்பட்ட சிவத்தரைக்கும் சுதந்திரத்திற்கும் கடவுளே உறவறுத்தது போல் இருந்தது. அடிமை வாழ்வுக்கு அமைக்கப்பட்டதாகவே சிவத்த

ரையை உத்தரகூடத்தினர் கருதினர். சமவெளியான சிவத்தரையின் தானியக் களஞ்சியம் உத்தரகூடத்தின் வாழ்வுக்கு இன்றியமையாததா யிருந்தது. இன்றியமை யாத பொருளை கௌவிக் கொள்வது உத்தரகூட தேசீ யத்தின் உயிர்க் கொள்கைகளில் ஒன்றல்லவா! உத்தர கூடத்தின் ஏகாதிபத்தியக் கரங்கள் சிவத்தரையை இறுகப் பற்றின.

மேலும், சிவத்தரை மக்கள் எந்த விதத்தில் அரு கதை உள்ளவர்கள்? சிறப்பின் சின்னம் சிறிதும் அவர் களிடம் உண்டா? தலையில் அடிபட்டு வளர்ச்சி கெட்ட குள்ளர்களாய், காதை மூடி நிற்கும் தொப்பியுடன்—உம், காது கடவுள் செய்த தப்பு என்ற எண்ணமோ? அல்லது உள்ளே இருக்கும் சிறு மூளையும் காது வழி ஓடிவிடும் என்ற பயமோ?—இந்தப் பிறவியினருக்கு சுதந்திரமா வது, ஆளும் உரிமையாவது?

கட்டுப்பாட்டுடன் இறுகப்பற்றி இவர்களை ஆளுவது தான் இவர்களுக்கு நன்மை பயக்கும். இந்த அடிப் படையில் உத்தரகூட ராஜாங்கம் சில காரியங்களைச் செய்தது. முதலாவதாக சிவத்தரைக்கு ஒரு வாயிலாக அமைந்த நந்திக் கணவாயை மூடியது. சிவத்தரையின் நெல்லும் கம்பளியும்—அந்நாட்டின் முக்கிய சொத்துக் கள்—வெளிச் செல்ல முடியாமல், உத்தரகூடத்தின ருக்கு கேட்ட விலையில் கிடைத்தன. இந்தப் பொருளா தார ஆதிக்கம் உத்தரகூட ஏகாதிபத்தியத்திற்கு சிறந்த துணையாயிற்று.

உத்தரகூடத்தின் மலைச்சரிவுகளில் உதித்தோடும் முக்ததாரைநதி சிவத்தரை சமவெளியின் உயிர்த்தாரை.

முக்ததாரையின் நீர் பாய்ந்துதான் சிவத்தரை நிலங்கள் பச்சை போர்க்க முடியும். முக்ததாரையின் நீர்தான் சிவத்தரை மாந்தர் குடிக்கும் நீர். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த உயிர்நாடி மீது தங்கள் பிடிநிலைத்தால், சிவத்தரைக்கு உத்தரகூடமின்றி என்றும் விமோக்ஷனமிராது. இந்த சீரிய கொள்கையின் விளைவாக முக்ததாரையைத் தடுத்து அணைகட்டும் முயற்சியில் ராஜஜீத் இறங்கினுன். வருடங்கள் பல ஓடின; முயற்சி பலிக்கவில்லை. ராஜ எந்திர நுட்பாளன் விபூதி தன் திறன் அறிவுகளை செலுத்தினுன் இம் முயற்சியில். பயங்கரமான மலைச்சாரலில் மலையாறு முக்ததாரையைத் தடுத்து நிறுத்துவது சாமானிய காரியமா? கட்டிய அணை பல முறை உடைந்து மக்களையும் பொருளையும் வாரி இறைத்துச் சென்றது. ஆனுல் மன்னன் ஆணையின்கீழ் விபூதி முயற்சியைத் தொடர்ந்து செய்தான். சந்தபட்டணத்து மக்களை இலவசக் கூலியில் வற்புறுத்தி அணைகட்டுவதைத் தொடர்ந்தான்.

உத்தரகூடத்தின் ஏகாதிபத்தியக் கரங்கள் ஓங்க ஓங்க, அதன் இயற்கைப் பிரதி விளைவாக சிவத்தரையின் எதிர்ப்பு இறுகியது. உத்தரகூடத்தார் எவ்வகையில் ஆளப்பிறந்த அறிஞர்கள்? எவ்வகையில் திறனே, பண்பாடோ, எழிலோ மிகுந்தவர்கள்? சதைக்கட்டியை அப்பியதுபோல் முகம் படைத்த அழகர்கள் உத்தரகூடத்தார்; பண்பாடு என்பது கிஞ்சித்தும் கிடையாது. அவர்கள் பாஷையின் எழுத்துக்கள், ஆ, என்ன அழகு! கரையான் ஊர்வதுபோல. அக்கரையானைப் போல, அவர்கள் அறிவையும் அரித்துவிட்டன அவை! அந்த அழகையும், பண்பாட்டையும், அறிவையும் சிவத்தரையில்

புகுத்தப் புகுந்த இந்த உத்தரகூட ஏகாதிபத்தியம் வெறும் கற்பனை.

பழைய இதிகாசம் கூறியது—உலக ஆரம்பத்தில், கடலைக் கடைந்த தேவர்கள் கோப்பையிலிருந்து அமிர்தத் துளிகள் சில பூமியில் விழுந்தன. அந்த அமிர்தம் தோய்ந்த மண்ணிலிருந்து முதல் சிவத்தரைவாசி தோன்றினான். தேவர்கள் உண்டு மிஞ்சிய கோப்பையை அசுரர்கள் நக்கிவிட்டு சாக்கடையில் வீசினர். அப்படி வீசப்பட்ட கோப்பையின் உடைந்த துண்டுகளிலிருந்து கிளம்பினான் முதல் உத்தரகூடவாசி. அதனால் தான் உத்தரகூடத்தார் கல்போல் நெஞ்சும், கரிபோல் முகமும் கொண்டு பண்பற்றிருக்கிறார்கள்.

சிவத்தரையின் சுதந்திர உணர்ச்சி, எதிர்ப்பு வேகம் சீறி எழுந்தது. அவர்கள் தலைவனாக அஹிம்ஸா போதகன் தனஞ்சயன் நாடெல்லாம் சென்று மக்களைத் தட்டி எழுப்பினான். சாந்தபோதம் சாதித்தான். இந்தக் கிளர்ச்சியை ஒடுக்க ராணஜீத் மைத்துனன் சந்தபாலை அவிழ்த்துவிட்டான். சந்தபால் தடியடி நாடகம் நடத்தினான். ஹிம்சையின் கோரம் மக்களை இன்னும் கிளறியது. ஹிம்சைக்குப் பதில் ஹிம்சையாக தடி ஏந்த மக்கள் கைகள் துடித்தன. ஆனால் தனஞ்சயன் போதித்தான்—"ஹிம்சையை வெல்வது அஹிம்சை. ஹிம்சையில் இறங்க சக்தி தேவையில்லை; ஆனால் அஹிம்சையைக் கைக்கொள்ள பலத்த மனோசக்தி வேண்டும். அலைகளை அடிப்பதால் புயல் நின்றுவிடாது; துடுப்புகளைத் திடனாகப் பிடித்துத்தான் புயற்காலத்தில் படகைச்

சமாளிக்க வேண்டும். ஹிம்சையின் வேரைக் கிள்ளு. தலை நிமிர்ந்து, நெஞ்சு தூக்கி, 'இந்த ஹிம்சை என்னைப் பாதிக்கவில்லை' என்று சொல்; மறு நிமிடம் ஹிம்சையின் வேர்கள் அறுந்துபோம். நிஜ மனிதத் தன்மையை ஹிம்சை வேதிக்க முடியாது. மனிதத் தன்மை தீச்சுடர். அதைத் தாங்கும் மாமிசம் அடியைத் தாங்கி அழும், அழியும்.'' மக்களின் மனதில் இப் போதனை திடம் உண்டாக்கியது. போதனையின் உட்கருத்தை உணரா விட்டாலும் அதன் வசீகரம் அவர்களை ஆட்கொண்டது. கிளர்ச்சி தொடர்ந்து நடந்தது.

தனஞ்சயன் மேலும் போதித்தான்—''உங்கள் ராஜத்துவத்தை ராஜனிடம் கேளுங்கள். ராஜத்துவம் மன்னனுக்கு மாத்திரமல்ல, மக்களுக்குந்தான். மன்னனிடம் மாத்திரம் தங்கும் ராஜத்துவம் ஒரு கால் நொண்டிபோல. அது தளர்ந்து தளர்ந்து நடப்பதைக் கண்டு கடவுளும் கண்ணீர் வடிப்பார். ஆகையால் உங்கள் ராஜத்துவத்தைக் கேளுங்கள், உங்கள் நலனுக்காக, மன்னனின் நலனுக்காகவும். உங்கள் ராஜத்துவ வில்லை தூசி படிந்துவிட்டது; ஆகையால் அது கவனிக்கப் படவில்லை. மன்னனானலன்றே ஆசனம் கிடைக்கும். முதலில் மன்னனாகுங்கள்; சிம்மாதனம் உடனே கிடைக்கும். உங்கள் மனதைத் தூய்மைப்படுத்துங்கள்!''

*       *       *

அபிஜீத் ராஜ குடும்பத்தில் பிறந்தவனல்ல; முக்த தாரையின் அருகில் கண்டெடுக்கப்பட்ட குழந்தை. ராஜ குணங்கள் பொருந்தியவன் என்று ராஜ குரு சொல்லி

யதன் பேரில் ராணுஜீத் அவனை உத்தரகூட யுவராஜா வாக்கி அரண்மனையில் வளர்த்தான்.

வயதுவந்த அபிஜீத்தின் மனதில் ஒரு சஞ்சலம் தோன்றியது. தன் நாயக ஸ்தலம் அரண்மனை அல்ல என்ற நினைப்பு அவன் மனதில் ஆடி ஆடி நிறைந்தது. இரவெல்லாம் முக்த தாரையின் அருகே தூங்க ஆரம்பித்தான். இதையறிந்த ராணுஜீத் ஓரிரவு அங்கு சென்று அபிஜீத்தைக் கேட்டான், "அபிஜீத், இந்நேரம் இங்கேன் இருக்கிறாய்?" என்று. "முக்த தாரையின் ஒலியில் என் தாயின் வாய்ச்சொல் கேட்கிறது" என்றான் யுவராஜா. மன்னன் மனதில் கலக்கம் தோன்றியது.

ஒருநாள் மந்திரி அபிஜீத்தைக் கேட்டான், "யுவராஜா, உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? அரண்மனையில் நீ தென்படுவதே இல்லை" என்று. அபிஜீத் சொன்னான், "உலகத்தில் என் இடமும் வேலையும் காட்டப்பட்டுவிட்டன—பாதைகளின் திறவை என் இடம், என் பணி."

ராணுஜீத்தும் மந்திரியும் கலந்தாலோசித்தனர், அபிஜீத் மனதை மாற்றுவது எப்படி என்று. முடிவில் முக்த தாரையை விட்டு விலகி தூரத்தில் அவனை சிவத்தரை அதிபனாக அனுப்பினர். முக்ததாரையின் ஒலி சிவத்தரையின் அரண்மனையில் கேட்காதென்று அவர்கள் எண்ணினர்; ஆனால் தூரத்து ஒலி யுவராஜனுக்கு தேனொலியாய் அழைப்புக் காட்டியது.

ராணுஜீத்தின் மாமன் விஸ்வஜீத் மோகன்கர் அதிபன். ராணுஜீத்தின் ஏகாதிபத்திய ரசம் அவனிலும் தோய்ந்தே இருந்தது. சந்தபட்டணத்தில் கலகம்

மூண்டபோது கருணை நியாயம் எல்லாவற்றையும் ஒதுக்கி தீப்பரப்பி ஆட்சியை நிலைப்படுத்தினான். ஆனால் அபிஜீத்தின் நட்பு அவனில் மாறுதல் மலர்ப்பித்தது. அபிஜீத் ராஜ சின்னங்கள் நிறைந்தவன்; ஆனால் உத்தரகூட சிம்மாதனத்தோடு அவன் நிற்கப் போவதில்லை என்று விஸ்வஜீத் மனதில் பட்டது. இரும்பும் தீயும் பாய்ந்த வழியில், சாந்தமும் அன்பும் அதிக பயன் பெருக்குகின்றன என்பதை உணர்ந்தான். ஏன், பரம்பரை பரம்பரையாக உத்தரகூடர்களை வெறுத்த சிவத்தரை வாசிகள், யுவராஜா அபிஜீத்திடம் இவ்வளவு விசுவாசம் காட்டுவதன் காரணம்?

தீபாவளிக்கு அபிஜீத்தை விருந்துக்கழைத்திருந்தான் விஸ்வஜீத். அன்றுமாலை ஒளியில் சூரியாஸ்தமன செஞ்சுடரில் அபிஜீத் அரண்மனை மாடத்திலிருந்து கௌரி சிகரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அங்குவந்த விஸ்வஜீத் அவனைக் கேட்டான், "என்ன பார்க்கிறாய்?" "ஏன், பாதைகளை, அக்கணவாயைத் தாண்டிச் செல்லும் பாதைகளை," என்றான் யுவராஜா. விஸ்வஜீத் நினைத்தான், "எவளோ இவனை முக்ததாரையருகே பெற்றெடுத்தாள். அவனை யார்கட்டி வைக்க முடியும்?" அதே நினைப்புத் தூண்ட அபிஜீத்திடம் சொன்னான், "உன் பிறப்பை சங்கொலி வரவேற்கவில்லை; திறந்த பாதையும் நித்திய முக்ததாரையும் தான் உன் பிறப்பைத் தரிசித்து வரவேற்றன," என்று.

தன் பிறப்பு ரகசியம் உணர்ந்த அபிஜீத்துக்கு நிலை கொள்ளவில்லை. உத்தரகூடபந்தம் அவன் மனதில் சிதைந்தது.

இந்நிலையில் சிவத்தரை வாசிகளின் சுதந்திரக் கிளர்ச்சியில் அவனுக்கு அனுதாபம் பிறந்தது. தனஞ் சயனின் போதனைகள் யுவராஜனின் மனதில் இன்ப பிம்பங்கள் ஏற்றின. பஞ்சத்தால் இரண்டாண்டுகள் பாதிக்கப்பட்ட மக்களிடம் வரிகளை வசூலிப்பதில் அபிஜீத் அக்கரை காட்டவில்லை. மன்னன் ராணுஜீத் தின் திட்டமான கட்டளைகள் இவ்விஷயத்தில் அபிஜீத் தின் அபிமானத்தை மாற்ற முடியவில்லை. அடைபட்ட நந்திக் கணவாயைத் திறந்தால் நெல்லும் கம்பளியும் வெளிச் சென்று பொருளாதார சுதந்திரம் நிலைநாட்டப் பட்டு ஓரளவுக்கு பஞ்சத்தின் கொடுமை தணியும் என்று நினைத்தான். பாதைகளைத் திறப்பதில் அவனுக்கு ஓர் மகிழ்ச்சி!

இச் சிந்தனையில் இருந்த அபிஜீத்துக்கு ராணுஜீத் திடமிருந்து அழைப்பு வந்தது, உத்தரகூடத்துக்கு உடனே மீளும்படி. ஏகாதிபத்தியக் கரங்களை இறுக் காது தளர்த்திய குறைக்காகவும், வரிகளை வசூலிப்பதில் ஆர்வம் காட்டாததாலும், சுதந்திரக் கிளர்ச்சியை நசுக்காததாலுமே, தான் மீண்டழைக்கப் படுவதைத் தெள்ளிதின் உணர்ந்தான் அபிஜீத். தன் கடைசிக் கைங்கரியமாக, சிவத்தரையின் நலனை உத்தேசித்து, நந்திக் கணவாயைத் திறந்து உத்திரவு பிறப்பித்தான். மறுநிமிடம் உத்தரகூடம் நோக்கி விரைந்தான்.

* * *

அதே நாள் முக்ததாரை அடைபட்ட அதிசயத்தைப் பாராட்ட உற்சவத் திருநாள். ஆம், 25 ஆண்டுகளுக் குப் பின்னல் எந்திர நுட்பாளன் விபூதி முக்ததாரை

யைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டான். அதன் பயங்கரப் பிரவாகத்தைத் தடுத்து, குறுக்கே பெரிய அணையும், அதை இயக்க கடும் எந்திரமும், அதைக் காத்து வானத்தைக் கீறிக்கொண்டு ஈட்டிபோல் எழுந்த உயர் கோபுரமும் கட்டி முடித்தான் விபூதி. கௌரீ சிகரத்தின் சங்கரன் கோயில் திரிசூலம்கூட எந்திரக் கோபுரத்திடம் தணிந்து நின்றது. கோயிலையும் தணிப் பித்து மீறி எழுந்தது விபூதியின் புதிய வெற்றிச் சின்னம்.

இனி சிவத்தரையின் உயிர்நீர் உத்திரகூடத்தின் இறுகிய கரங்களில் பிடிபட்டது. ஏகாதிபத்தியத்தின் இப்புது சாதனையைப் பாராட்டி அன்று மாலை சங்கரன் கோயிலில் பூஜையும் உற்சவமும். மன்னன் ராணுஜீத் மரியாதைச் சின்னமாக, அடிவாரத்தில் முகாம் எழுப்பி பூஜைக்குக் கோயில் வரை நடந்தே செல்ல தீர்மானித் தான். உத்தரகூட வாசிகள் கூடியெழுந்து மாலை வேளையில் கோயில் செல்லும் வழியை நிரப்பிக் கூடி ஆர்ப்பரித்தனர். விபூதியின் திறனைப் பாராட்டினர். உத்தரகூடத்தின் வெற்றியை உரைத்தனர்.

ஒருவகையில் அது விபூதியின் சுயகௌரவ நாள். அன்றைய உற்சவம் அவன் எந்திர நுட்பத்திண்மையின் ஒப்பம். மக்கள் அவனை வியந்தனர். மாலைப்பூஜை யின் நிமித்தம் அவன் சாலையில் சென்று கொண்டிருந் தான். கட்டப்பட்ட முக்ததாரை மௌனம் சாதித்தது. அதனது கலகலப்பு ஒலிகளுக்கு பதில் பறவைகளின் கீச் சொலியே கேட்டது. அசுரனது எலும்புக் கூட்டுத் தலைபோல வானில் அவன் எந்திரமும் கோபுரமும்

காட்சியளித்தன. இயற்கையை வென்று, எதிரே நிற்கும் சங்கரன் கோயிலையும் எகிறிநின்ற எந்திரம் விபூதியின் சாதனை. அதன் அரசியல் விளைவுகளில் அவனுக்கு அக்கறையில்லை.

அவன் மனக்களிப்பைக் கலைக்க வந்தான் யுவராஜா வின் தூதுவன். வந்து சொன்னான்—“விபூதி மகாபிரபு! பல ஆண்டுகள் முயன்று, பல உயிர்களைப் பலி கொடுத்து அணையைக் கட்டி விட்டாய். சிவத்தரை மக்கள் இன்னும் உணரவில்லை, அவர்களுக்கு கடவுள் அளித்த நீரை நீ கட்டி நிறுத்தி விட்டாய் என்று. அவர் கள் வயல்கள் வாடி அழியும் என்பதை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. நிஜம், நீ இயற்கையை வென்று விட்டாய். உன் எந்திரத்தின் மகிமையும் சிறந் தது. நீயும் புகழ் பூண்டாய். போதும். கைத்திறனைக் கொஞ்சம் மறந்து மெய்த்திறனைச் சிந்தித்துப் பார். உன்சாதனை சிவத்தரையின் சாவாகலாமா? கட்டிய அணையை உடைத்து இன்னும் பெரிய புகழ் தேடிக் கொள். இதுவே யுவராஜாவின் வேட்கை.”

“கட்டியது என் பொறுப்பு. கட்டி முடித்த அணை உத்தரகூடத்தின் செல்வம். அதன்மீது எனக்கு அதிகார மில்லை” என்றான் விபூதி.

“விபூதி, நீ சொல்வது தவறு. ஆக்கிய பொரு ளனைத்தும் அழியும். நாசதேவன் நுழையும் வழிகள் பல. நீ செய்யாத, செய்ய விரும்பாத மகத்துவத்தை யுவராஜா செய்துவிடலாம்,” என்று விடடு தூதுவன் போனான்.

விபூதி நினைத்தான்—“என்ன, தூதுவன் சொன்ன தன் கருத்து? யுவராஜா அணையை உடைத்து விடு

வானு?'' இக்கலக்க நினைப்பின் இடையில், அவ்வழி வந்த உத்தரகூட வாசிகள் கூட்டம் அவனை அலாதியாகத் தூக்கி ஆர்ப்பரித்துக் கொண்டு கோயிலை நோக்கிச் சென்றது.

மாலை வெயிலின் மஞ்சளொளி சாலையில் தடவியது. மன்னனும் மந்திரியும் கோயிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். இரண்டாண்டாக சிவத்தரை வரி கொடாதது குறித்து மந்திரியைக் கடிந்துகொண் டிருந் தான் மன்னன்: ''சிவத்தரை வாசிகள் அந்நியர். அந்நியரைப் பயத்தால் அடக்கவேண்டும். அவர்களுடன் நெருங்கிய பழக்கம் தவருன கொள்கை. ஆனல் யுவ ராஜா, ஏன், நீ, மாமன் விஸ்வஜீத், தனஞ்சயன் எல் லோரும் சிவத்தரை வாசிகள் பக்கமே இருக்கிறீர்கள். முடிவாக நந்திக் கணவாயைத் திறந்துவிட்டு அபிஜீத் சிவத்தரைக்கு சுதந்திரமே கொடுத்துவிட்டான். நல்ல வேளை, முக்ததாரை கட்டப்பட்டு, நம் பிடி நிலைத்திருக் கிறது. அபிஜீத்தை அழைத்துவிட்டேன்; தனஞ்சயனை யும் அகற்றி விட்டால் பீடை ஒழியும்.''

''பிரபு! சில தீமைகளைத் தொடாது விடுவதே நல் லது,'' என்ருன் மந்திரி.

''நீ ஏன் கவலைப்படுகிருய்? அது என் பொறுப்பு— இனி விஸ்வஜீத்துக்கும் ஒன்று செய்யவேண்டும். ராஜ குலத்தில் இருந்தே ராஜகுலத்தை வெறுக்கிருன்'' என் னும்போது, தலைநரைத்த விஸ்வஜீத் அங்கு வந்தான். ''நீயும் பூஜைக்கு வருகிருயா? விரும்பத்தக்க மனமாற் றம்'' என்ருன் மன்னன்.

“மன்னு, சிவன் இன்றைய சேவையை ஏற்கான். கடவுள் ஒழுக்கும் தாரையை ஒடுக்கி, அதற்கோர் உற்சவமா? இது நல்லதல்ல,” என்றுன் விஸ்வஜீத்.

“மாமா, அபிஜீத்தின் மனதைக் கலைத்து, அவனது உத்தரகூட பாசத்தை சிதைத்தாய். அதன் விளைவாக, நந்திக் கணவாயைத் திறந்து, உத்தரகூட நெல் பிரச்னையைக் கடினமாக்கி விட்டான் யுவராஜா. நீ நாட்டின் விரோதி,” என்று கடிந்து துரத்தினன் மன்னன். விஸ்வஜீத் நகன்றுன்.

எரியும் செக்கரில் எமன் கைபோல் எழுந்த எந்திரக் கோபுரத்தைப் பார்த்துக்கொண்டே கோயிலை நோக்கி நகன்றனர் மன்னனும் மந்திரியும்.

*　　　*　　　*

உத்தரகூடம் மீண்ட அபிஜீத்தின் மனம் அரண்மனையில் தங்க மறுத்தது. கௌரி சிகரத்தின்மீது மாலைச் சூரியன் கதிர்ச்செறியல் மேக இறக்கை விரித்து இரவை நோக்கிப் பறக்கும் தீச்சுடர்ப் பறவைபோல் காட்சியளித்தது. யுவராஜன் மனமும் அம்மாதிரி பறக்க விரும்பியது. வெளி உலகில் ஒவ்வொருவனின் வாழ்க்கை ரகசியத்தையும் கடவுள் எழுதி வைக்கிருர். முக்ததாரை அபிஜீத்தின் வாழ்வு ரகசியம், வாழ்க்கைப் பொருள், தத்துவம்: முக்ததாரையின் பாதங்கள் கட்டுப்பட, அபிஜீத்தின் உள்ளம் துடித்தெழுந்தது. உத்தரகூட சிம்மாதனம் அவன் உள்ளத்தின் அணை. அதை விடுத்து முக்ததாரையை விடுவிப்பது அவன் வாழ்க்கைக் கடன். அப்பணி மீது கிளம்பினுன் அவன். அவன்

மீது பாசமுற்ற ராஜகுமாரன் சஞ்சயனும் அவனைத் தொடர்ந்தான். "தம்பி, நீ உன் வழியை நீயே கண்டு கொள்; என்னோடு வராதே" என்று தடுத்தான் அபி ஜீத். "உன்னை அழைப்பது யார்? நீ செல்வதெங்கே? என்று உன்னை நான் வினவவில்லை. என் உரிமை உனது துணை" என்று பின் தொடர்ந்தான் சஞ்சயன்.

வழியில் காவலர் படைத்தலைவன் உத்தவன் அபி ஜீத்தை எச்சரித்தான்—"நீ நந்திக் கணவாயைத் திறந்து விட்டாய்; மன்னன் அதை ரசிக்கவில்லை. நீ இவ்வழி செல்வது நல்லதல்ல." ஆனால் அபிஜீத்தின் வழி அவ்வழியன்றோ இருந்தது! மேலே நடந்தான் தயக்க மின்றி.

பத்தெட்டு முன் செல்லுமுன்பே, சேனைபதி விஜய பாலன் எதிரிட்டு வந்து அபிஜீத்தைக் கைதி செய்தான், மன்னன் ஆணைப்படி. அருகிலிருந்த மன்னனின் முகா மில் அடைபட்டான் யுவராஜா. சஞ்சயனின் எதிர்ப் புகள் பலனற்றன.

"புயல்வானம் கதற,
அகல்கடலில் பட(கு) ஊக்கி—கிழிந்த
உயர்பாயை விரித்தே,
உனதுசொல் கேட்(டு) உன்சரணில்
அயர்(வு)ஆற இதோ வந்தோம்!"

என்ற வீரக்குரல் எழுப்பிக் கொண்டு சாது தனஞ்சயன் சில சிவத்தரைவாசிகளுடன் சங்கரன் பூஜை நிமித்தம் அவ்வழிப்போந்தான்—பூஜையின் கருத்துணராமல்.

ஆம், சென்ற இடத்தில் மன்னன் தனஞ்சயனைச் சிறைப்படுத்தினால்? இச்சந்தேகம் எழுந்தது சிலருக்கு. ஆனால் தனஞ்சயனின் பயமற்ற பான்மையில் அவன் சிஷ்யர்களுக்கும் தைரியமும் நம்பிக்கையும் தோன்றின. முன்னே நடைவைத்தனர். தனஞ்சயன் சுற்றிப் பார்ப்பதாகச் சொல்லிவிட்டு விலகினான்.

எதிரிட்டு வந்த உத்தரகூட வாசிகள் கூட்டம் ஒன்று, அவர்களின் காதை மூடி நிற்கும் தொப்பியைக் கேலி செய்தது. அவர்களை மிரட்டி, "கோஷம் எழுப்புங்கள்—'விபூதி வாழ்க' என்று" என்று கட்டளையிட்டது.

"ஏன்?" என்றனர் சிவத்தரை வாசிகள்.

"ஏனா? முட்டாள்கள். காதை மூடிவைத்தால் எதுதான் உங்களுக்குக் கேட்கும்? விபூதி மகாபிரபு உங்கள் உயிர் நீரைத் தன் கையில் பற்றி வைத்திருக்கிறான். அவன் கருணை காட்டாவிட்டால், மழையில்லாக் காலத்து தேரைபோல் வறண்டு போவீர்கள், ஜாக்கிரதை. விழிக்கிறீர்களா... உங்களுக்கு என்னதான் விளங்கும்? அதோ பார், முக்ததாரையைத் தடுத்து நிற்கும் அணை, அதற்கு மேல் எழுந்து நிற்கும் எந்திரத்தை—இரும்பு விட்டில் போல் தாவி நிற்கும்" என்று விளக்கினான் ஏகாதிபத்திய வீரனொருவன்.

"கேலிக்கூத்து, அடுத்து உங்கள் விபூதிக் கொல்லன் அந்த விட்டில் மீது ஏறி சந்திரனைப் பிடிக்கிறான் என்று கூடச் சொல்வாய், உம்," என்று நகைத்தான் சிவத்தரை வாசி ஒருவன்.

"பார், இக் கண்மூடி, காதுமூடிப் பிறவிகளுக்கு விமோக்ஷனமா?" என்று வெறுப்பு வார்த்தை கொட்டி விட்டு நகன்றது ஏகாதிபத்தியக் கூட்டம்.

அது சமயம், வியர்க்கும் குதிரையில் விரைந்து வந்த சிவத்தரை வாசி பீஷன் ஒரு கலக்க மூட்டும் செய்தியைப் பிரஸ்தாபித்தான்—"மன்னன் யுவராஜனைத் திருப்பி அழைத்துவிட்டு, சிவத்தரைக்கு அனுப்ப மறுக்கிருன்," என்று.

"அப்படியா? மன்னனை எதிர்த்து யுவராஜனை மீட்போம்," என்று சிவத்தரை வாசிகள் கர்ஜித்தனர். அதே கணம் கோயிலிலிருந்து மீண்டுகொண்டிருந்த மன்னனும் மந்திரியும் நுழைந்தனர். மன்னனைச் சுற்றிக் கொண்டு சிவத்தரை மக்கள் வேண்டினர்—"மன்ன! எங்கள் யுவராஜனைத் திருப்பிக் கொடுத்துவிடு."

"பின் வரிகள் கொடாமல் இருக்கலாம் என்பதற்காகவா?" என்ருன் மன்னன்.

"நாங்கள் பட்டினியால் வாடுகிருேமே" என்ருன் ஒரு சிவத்தரைவாசி.

"ஆம், பட்டினி ஆளும் சிவத்தரையில் வரிகள் எப்படிப் பயிர்க்கும்?" என்று கொண்டே நுழைந்தான் தனஞ்சயன். "அதிகப்படி உணவுதான் மன்னனுக்குச் சொந்தம்; பட்டினி உணவு மன்னனுக்குச் சொந்தமல்ல. அதைப் பயத்தால் மக்கள் கொடுத்து விடலாம். ஆனல் நான் கொடுக்காதீர்கள் என்று தடுத்திருக்கிறேன். ஏனெனில் அது அவர்களுக்கே சொந்தம்."

"ராஜதுவேஷம் பரப்பும் உன்னை இப்பொழுதே கைதி செய்கிறேன" என்ருன மன்னன்.

கொஞ்சமும் கலக்கமோ மாறுதலோ இன்றி தனஞ்சயன் சொன்ஞன்—"மன்ஞ, பலாத்காரத்தால் எதையும் ஆக்கிரமித்துக் கொள்ளவோ கைப்பற்றவோ முடியாது. எல்லாவற்றையும் தாராளமாகக் கொடுப்பவனே அவற்றை உண்மையில் வைத்துக் கொள்கிருன். பேராசை கொடுப்பது திருட்டுச் சொத்துகள்; அவை நிலேக்கா. நீ உணரவில்லே, பலாத்காரத்தால் பற்றுவது உன்னதல்ல; நீ தொட்டளவே அது உன்னிடமிருந்து ஓடிவிடும்."

"அது முடியாது, எங்கள் தலேவனை நீ தொட முடியாது, மன்ஞ" என்று ஆர்ப்பரித்தனர் சிவத்தரை மக்கள்.

"மக்காள், என்னை விட்டுவிட்டு நீங்கள் போங்கள் —நான் உங்களுக்கு பலம் கொடுபபதாக இன்றுவரை நினைத்தேன்; ஆஞல் உண்மையில் உங்களுக்கிருந்த பலத்தை உறிஞ்சி எடுத்திருக்கிறேன். உங்கள் காலில் நிற்க உங்களுக்கு மனேபலமில்லேயே! நானின்றி நடக்க மாட்டேன் என்கிறீர்கள். பெருங்கடன் கொண்ட மக்கள் பொறுமையாகப் பணிசெய்தே அதைத்தீர்க்க முடியும். என்னைக் கடவுளிலும் பெரிதாக நினைத்து, உங்கள் கடன்களைக் கணக்கிலிருந்து அடித்துவிடுவேன் என்று எதிர்பார்க்கிறீர்கள். அது தவறு. என்வரை வந்து நின்றுவிட்டு, மேலே கடவுளிடம் செல்ல மறுக்கிறீர்கள். அது பெருந்தவறு. உங்கள் பூஜையை என்னிடம் கொட்டிவிட்டு,நீங்கள் சூனியமாகுகிறீர்கள். உங்கள் பொறுப்பை

என்மீது வீசிவிட்டு கடமொழிந்ததென்று நினைக்கிறீர்கள். அது தவறு. உங்கள் கால்களால் நடக்கப் பழகுங்கள். என்னை விட்டுப் போங்கள்" என்றான் தனஞ்சயன்.

மன்னன் கட்டளைப்படி உத்தவன் தனஞ்சயனை விலங்கிட்டு எடுத்துச் சென்றான். தனஞ்சயன் பாடினான் தளராமல்—

"விலங்குகள் என்னை வேதிக்கா—உன்
பலவந்தம் உணர்ச்சியைப் பாதிக்கா!
நலமனம் வீர சுதந்திர—சாசனம்
நட்டிபேர் நகைவெடிக்கும்!

"காவலால் கைதி ஆகேனே—உன்
காவலர் காண்பரோ என்வழியை?
தேவன்இல் வாயில் சேர்ந்தஎனை—உன்
சிறையொடு நிறுத்தலெங்கே?"

* * *

யுவராஜன் சிறைப்பட்டது ராஜகுமாரனை வாட்டியது. மக்களின் அன்புக்கனி சிறையில் அழுகுவதா என்று உள்ளம் கொதித்தான். மன்னனுக் கெதிராக மக்களை எழுப்பி யுவராஜனை மீட்கத் தீர்மானித்தான். அதற்காக ஊரில் புகுந்து பலரைக் கண்டான். மக்கட் தலைவர்களைச் சந்தித்தான். ஆனால் அவன் ஏமாந்தான். நந்திக் கணவாய் திறக்கப்பட்ட செய்தி கேட்டு உத்தரகூட மக்கள் உள்ளம் கொதித்து யுவராஜன் மீது சீறினர். உத்தரகூட செழிப்புக்கு உலைவைத்தான் என்று யுவராஜனை வெறுப்புடன் ஒறுத்தனர். கிளர்ச்சி மனப்பான்மையுடன் அவனைப் பற்றித் தண்டிக்க தீர்மானித்து உத்தரகூட மக்கள் பெருந் திரளாகக் கிளம்பினர். சீக்கிரம்

செய்யாவிட்டால், மன்னன் அவனைக் காத்து ஒளித்து விடுவான் என்று கருதினர். எனவே ஊரெல்லாம் தேடினர் அவனை; அகப்படவில்லை. இறுதியாக முக்ததாரை அருகே மன்னன் முகாம் பாதையில் மந்திரியைக் கண்டனர்.

"மந்திரி, நடக்காது காரியம். யுவராஜனை ஒளிப்பது பிரயோஜனமற்ற காரியம். உத்தரகூட ரத்தம் உதித்து, உத்தரகூடக் காற்றை உண்டு, சிவத்தரையோடு சேர்ந்த அவன் துரோகி. மன்னன் அவனைத் தண்டிக்கான்; ஆனால் மக்கள் கோபம் அவனைத் தண்டிக்கும். வெளியே எடு, யுவராஜனை அவன் ஒளிப்பிடத்திலிருந்து" என்று ஒரே குரலாக சீறினர்.

"வேண்டுமானால், அவனை மன்னன் சிறையிலிருந்து நீங்களே வெளியெடுத்துக் கொள்ளுங்கள்" என்றான் சாவதானமாக மந்திரி.

"யுவராஜன் சிறையிலா? ஆ, மன்னன் சீலன், மாசற்ற நியாயத்தான். எங்கள் உள்ளம் குளிர்ந்தது" என்று கூட்டம் விலகியது.

மாலைச் சூரியன் மாய, வானமிருண்டு வந்த குளிர்மையில், விபூதியின் எந்திரம் சாவு போலவும் பிசாசு போலவும் பயக்கோலம் காட்டியது. அதைப் பார்த்து மந்திரி, எதிர்த்த சங்கரன் கோயில் சூலத்தையும் நோக்கினான். அது எஞ்சிய மாலைக் கிரணங்களில் எரிந்து வெகுண்டது. மந்திரி நகன்றான்.

மறுகணம் படையினருடன் திடீர்த் தாக்குதல் தாக்கிய விஸ்வஜீத் மன்னன் முகாமிற்கு தீவைத்து அடை

பட்டிருந்த தனஞ்சயனையும் யுவராஜனையும் விடுவித்தான். யுவராஜனைப் பாதுகாப்புக்காக தன்னுடன் உடனே மோகன்கர் வரும்படி வேண்டினான். ஆனால் அபிஜீத் சொன்னான்—"இன்று என் சுதந்திரத் திருநாள்; நந்திக் கணவாயை விடுவித்தேன்; அரண்மனையை விடுத்தேன்; மன்னன் பிடியும் அறுந்தது; இன்னும் ஒரு கடன் பாக்கி இருக்கிறது, என் பிறப்புக் கடன். என் தாய், என் தாதி முக்ததாரை அடைபட்டுக் கிடக்கிறாள். அவளை நான் விடுவிக்க வேண்டும். என் பணி என்னை அழைக்கிறது. மணி அடித்துவிட்டது. விளக்கும் சீக்கிரம் ஏற்றப்படும்" என்று விட்டு கௌரி சிகரத் திசையில் நகன்றான. மனது பொரும, விஸ்வஜீத் ஊரைநோக்கி விரைந்தான்.

நிகழ்ச்சிகளின் போக்கை நினைத்து நின்று கொண்டிருந்த தனஞ்சயன் பக்கம் உத்தரகூட வாசிகளின் கோபக் கூட்டம் ஒன்று வந்தது. அவனை அடையாளம் கண்டு, "இவன் இந்நேரம் இங்கிருப்பதின் மர்மம்? யுவராஜன் சிறையிலிருப்பதாகச் சொன்னார்கள்; அது பொய்யாய் விட்டது. நிச்சயம் அவன் ஒளிக்கப்பட்டிருக்கிறான். யுவராஜன் மனதை மயக்கிய இந்தத் தனஞ்சயனுக்குத் தெரியும் அவன் இருக்குமிடம்...ஏ சாது! யுவராஜன் எங்கே? சொல். இல்லாவிட்டால் உன்னைப் பிடித்து இழுத்துச் செல்வோம்" என்று கத்தினர்.

"அப்பா, கேட்டவுடன் கொடுத்துவிடுபவனைப் பிடிப்பது எப்படி?" என்றான் தனஞ்சயன்.

"இச்சாதுவின் பேச்சே விளங்கவில்லை. இவன் இந்நேரம் இங்கிருப்பதும் விளங்கவில்லை. நிச்சயம், யுவராஜனை சிவத்தரைக்கு மீட்டுச் செல்ல சதி இருப்பதாகவே தெரிகிறது" என்றான் கூட்டத்தில் ஒருவன்.

உத்தரகூடத்தாரின் இன்னொரு கோபக் குழு இவ்விடை வந்தது. "யுவராஜனை இங்கு முகாமில் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சென்று பார்த்தால், முகாம் எரிந்து சாம்பலாகக் கிடக்கிறது" என்றனர் இக் கூட்டத்தார்.

இது சமயம் இன்னொரு கூட்டம் வந்தது. "என்ன சூது! மன்னன் மாமன் யுவராஜனை மோகன்கருக்கு இழுத்துச் சென்றுவிட்டானும்! நமக்குத் தவறிழைத்த யுவராஜனைத் தண்டிக்கும் உரிமை நமக்கற்றுப் போய்விட்டது" என்றனர்.

"சரி, சரி, பார்க்கலாம்" என்று விட்டு ஊரை நோக்கி விரைந்தனர் உத்தரகூட வாசிகள் அனைவரும். தனஞ்சயன் மறுபுறம் நகன்றான்.

* * *

நந்திக் கணவாயின் திறப்பு அந்நாள் நிகழ்ச்சிகளைப் புதுவகையில் திருப்பியதை நினைத்து விபூதிக்கு ஒரே கோபம். முக்ததாரை, அணை, எந்திரம், அதைச் சாதித்த தான், தன் பெருமைக்காக பூஜை என்று பேச்சுக்கள் இருக்க வேண்டியிருக்க, நந்திக் கணவாய் செய்தி காரணமாக மக்கள் கவனம் முழுக்க யுவராஜன் மீது திரும்பியது, தான் ஒரு மூலையில் தள்ளப்பட்டு, இந்தச் சீர்குலைவை சரிப்படுத்தத் தீர்மானித்து, நந்திக்கணவாயை

உடனே அடைத்து விடுவதென்ற நோக்கத்துடன், வழியில் செல்வோரை யெல்லாம் கூலிவேலைக்கு இழுத்து வர ஏவலாளர்களை அனுப்பினன் விபூதி. அவ்விருட்டு வேளையில் கோயில் சேவையிலிருந்து திரும்புவோர், தெருவில் திரிவோர், எல்லோரையும் பற்றிச் சேர்க்கும் படலம் ஆரம்பமாகியது. இதன் வெற்றியை மேற்பார்க்கும் முகமாக விபூதியும் வெளிக் கிளம்பினன். அன்றைய இரவிற்குள் சிவத்தரை அறியாமல் கணவாயை அடைத்தாக வேண்டும்; அது அவன் அவா.

பிரதம ஏவலாளனைச் சந்தித்த விபூதி கேட்டான், "எத்தனை பேர் சேர்த்திருக்கிருய்? இரவிற்குள் கட்டி ஆகவேண்டும்."

"பிரபு, பயப்பட வேண்டாம். வேண்டிய ஆட்களைக் கட்டாயம் சேர்த்துவிடுவேன். கையில் சாட்டை இருக்கும் போது, இச்சை பூர்த்தியாகத் தடங்கல் ஏது?" என்று குதூகலம் சொன்னன் ஏவலாளன்.

"அது மட்டுமல்ல. பகலில் யுவராஜன் தூதுவன் வந்து என்னை அணையை இடிக்கச் சொன்னன். இல்லாவிட்டால் யுவராஜன் இடிக்கலாம் என்ருன். ஆம், அணையில் சில இடங்கள் பலமற்றிருக்கின்றன. தெரிந்தோன் அவற்றை லகுவில் துளைத்து விடலாம். கணவாயைக் கட்ட ஆரம்பித்து, அணை இடிந்தால்?" என்று கலக்கம் காட்டினன் விபூதி.

"அப்படியானல், அணைக்கு காவல் போட்டு விடுங்கள்."

"அவசியமில்லை, அணையோடு விளையாடுபவன் பிணமாவது நிச்சயம். துளைக்கப்பட்ட அணை துளைப்பவனை இழுத்தே செல்லும். சாவே அணையின் காவலாக நிற்கிறது. அதைப் பற்றிப் பயமில்லை. கணவாயை மூடிவிட்டால் கவலை ஒழியும்" என்று இளஞ் சிரிப்பு சிரித்தான் விபூதி.

அவ்விடம் அலைந்து கொண்டிருந்த தனஞ்சயன் அக்கணம் அங்கு வந்தான். அடுத்து மன்னனும் மந்திரியுடன் வந்தான். யுவராஜனின் மறைவு குறித்து மனக் கலக்கம் கொண்ட மன்னன் அவனைத் தேட ஆட்களை நாற்புறமும் அனுப்பினான். சிலர் அவன் மோகன்கர் அழைத்துச் செல்லப்பட்டதாக தகவல் கொணர்ந்தனர். சிலர் அவன் முக்ததாரைப் பக்கம் இருட்டில் காணப்பட்டதாகவும், சிலர் அவன் கௌரி சிகரத் திசையில் செல்ல சிலர் கண்டதாகவும், ஆக பலதிறப்பட்ட செய்திகள் சொல்லினர். இறுதியில் தானே தேடுவதென்ற தீர்மானத்தில் கிளம்பிவந்த மன்னனுக்கு தனஞ்சயன் அங்கிருப்பது விளங்கவில்லை. "ஏ சாது! யுவராஜன் எங்கே? உனக்குத் தெரிந்திருக்கும்" என்றான்.

"தெரிந்த விஷயம் என்மனதில் மறைவதில்லை, மன்னா."

"பின் நீ இங்கிருப்பதன் அர்த்தம்?"

"யுவராஜனைக் காணத்தான்!"

அது சமயம் சிவத்தரையினர் கூட்டம் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்தது. மன்னனைக் கண்டதும், "மன்னா, உனக்கு வேண்டாத யுவராஜனை எங்களிடம் கொடுத்து

விடு. அவனைச் சிறைப்படுத்தி என்ன பயன் கண்டாய்? நாங்கள் அவனை எங்கள் மன்னனுக்குவோம். கொடுத்து விடு'' என்று வேண்டினர்.

மனம் நெகிழ்ந்த மன்னன், "அவனைத் தேடியே நானும் இங்கு வந்திருக்கிறேன்'' என்றான்.

ஒருவகை சோகப் படலம் பரவியது. மறுகணம் வறண்ட முக்த தாரையின் மார்பில் பால் நனைப்பூறும் ஈர வாசனை காற்றில் மிதந்து வந்தது. அடுத்து நீரின் அசைவுப் பிரமை தோன்றியது. தொடர்ந்து சொய் என்று முக்த தாரையின் சுதந்திர வீழ்ச்சி நாளெல்லாம் உறைந்த மௌன சூழ்வைக் கிழித்தது. என்ன, முக்த தாரை விடுபட்டதா? அணை இடிபட்டதா? ஆம், வாழ்க்கை ரகசியத்தை திறந்து விட்டான் யுவராஜன், தன் தாயை விடுவித்தான்; அவள் தன் கரங்களிலே அவனை ஏற்றுச் சென்றாள். சுதந்திரத்தின் வெற்றிநாள் அது.

தனஞ்சயன் சொன்னான்—"நெஞ்சுத் துடிப்பின் உயிராய அவன் வருகிறான்; முரசு கொட்டி வரவேறுங்கள். உயிர்ப்பின் சூழ்மையில் அவன் ஆடுகிறான் நடன இசையோடு; அவனை உணர்ச்சியில் வரவேறுங்கள். அவன் கண்காணிப்பு இரவில் கண் திறந்த விழிப்போடு நக்ஷத்திரத்திற்கு நக்ஷத்திரம் காவல் வைக்கிறது. அஞ்சாமல் எதிர்த்து நோக்குங்கள். கட்டுகள், காவல்கள், பந்தங்கள், பிணைப்புகள், விலங்குகள் எல்லாம் விண்டு போம்; உள்ளம் மலரும்.''

சஞ்சயன் அவசரமாக வந்தான். "மன்னா! அண்ணன் முக்ததாரையை அவிழ்த்து விட்டான். அப்பணி

யில் என் உதவியை ஏற்க மறுத்து என்னைப் பின் கிறுத்திவிட்டான்'' என்று நடுக்கக் குரலில் சொன்னுன்.

உச்சியில் சங்கரன் கோயில் பூஜை ஒலி கேட்டது—

"சங்கரா! வென்ருய்! வெள்ள
சக்தியின் வென்ருய்! ஐயம்
எங்குமே உடைத்து வென்ருய்!
கட்டுகள் வெட்டி வென்ருய்!
சங்கரா! வென்ருய்! வென்ருய்!

ஆம், முக்ததாரையின் வெற்றிப் பூஜை அது! விபூதியின தல்ல.

# மன்னன்

அந்த ராஜ்யத்தில் மன்னன் முகத்தை மக்கள் கண்டதே இல்லை. நாட்டில் நலமும் சுபிக்ஷமும் ஒழுங்கும் அமைதியும் நன்கு செழித்தன. அதை வைத்தே மன்னன் ஒருவனிருக்க வேண்டுமென்று உணர வேண்டியிருந்தது. அதைச் சந்தேகித்தோரும் பலர்.

அன்று வசந்த பௌர்ணமி; ஹோலி கொண்டாட விசேஷ ஏற்பாடுகளாகி யிருந்தன. தூரதேசத்து மக்களும் மன்னர்களும்கூட உற்சவத்திற்கு வந்திருந்தனர். அந்நாட்டு மக்களின் நெஞ்சில் பெருமை, உவகை. ஆனால் அந்நியரின் இந்த அடுக்குக் கேள்விகள்— "உங்கள் மன்னன் எங்கே?" "உங்கள் மன்னனை பார்த்திருக்கிறீர்களா?" "உங்களுக்கு மன்னன் உண்மையாக இருக்கிறானா?"—அப்பப்பா, மக்கள் மனதில் குழப்பத்தை உண்டாக்கின. இடையே ஒருவன் நம் மன்னன் கரியவன், அழகற்றவன், ஆதலால்தான் வெளி வருவதில்லை என்று ஒரு கொள்கையைப் பரப்பி வைத்தான்.

உற்சவத்தில் முழுச் சுவையும் ஊற விரும்பி மும்மரமாக இருந்தான் தாதா. மக்களைத் திரட்டி ஊரெல்லாம்

தெருவெல்லாம் பாட்டும் முழக்கமுமாகப் பரப்பினன். அவன் நெஞ்சில் பேருவகை; தென்றலில் அதைச் சிதறி விரிக்க விரும்பினன். அவனேடு திரிந்தவர் சிலருக்கு அன்று புதுமையான சந்தேகம் கிளம்பியது—இந்நாட்டிலே வாழ்ந்தும் இன்றுவரை மன்னனைக் கண்டதில்லை; இந்தத் திருநாளிலாவது வெளிவரக் கூடாதா? இந்த நிலையில் அந்நியர்கள் வேறு, "உங்கள் மன்னன் எங்கே?" என்ற கேள்வியோடு. நிஜமாகவே இது ஒரு குறை.

ஆனல் தாதா போதித்தான்— நாடெல்லாம் மன்னன் நிரம்பியிருக்கிறன்; அவன குறை? ஏன், அவன் நம் எல்லோரையுமே மன்னனுக்கி இருக்கிறன்!

நம்மன்னன் நாட்டில் நாமெல்லாம் மன்னர்!
நம்மிச்சை செய்து நாதன்சொல் கேட்போம்,
அடிமைசெய் மன்னன் ஆட்சிநம(து) இல்லை;
நம்மைப்பா ராட்டி தன்னைப்பா ராட்டும்
நம்மன்னன் நாட்டில் நாமெல்லாம் மன்னர்!

சிறுமையின் கோட்டை பொய்நமக்(கு) இல்லை;
நம்பாதை தோண்டி நம்மன்னன் பாதை
உறுவோம்; நாம் இருளில் வழிஇழப்ப(து) இல்லை;
நம்மன்னன் நாட்டில் நாமெல்லாம் மன்னர்!

மன்னன் தென்படுவதில்லை என்பதற்காக, அவனைப் பற்றி ஏன் இந்தக் கலக்கம்?

* * *

நகரத்தின் முன் வாசலில் அந்நியர் கூட்டம் அதிகரித்துக்கொண்டே வந்தது. வந்தவுடனே மன்னன் காணப்படா நாடென்பதுதான் அவர்கள் முதலில் கேட்ட

வார்த்தை. அவர்களுக்கு ஒரே ஆச்சரியம். காணப் படா மன்னன் என்ருல் இல்லாத மன்னன் என்றன்ரு அர்த்தம்? எந்த நாட்டிலும் மன்னன் தன்னை வெளிப் படுத்தி விளம்பரப்படுத்திக் கொள்ளத் தயங்குவதில்லை. இந்த நாட்டில் ஒழுங்கும் நிறைவும் களிப்பும் தெள் ளெனத் தெரிகின்றன. ஆனல் மன்னனெங்கே? அவனை யாராவது கண்டதுண்டா?

அதுமட்டுமா? ஊரில் நுழைந்தவுடன் உற்சவ ஸ்தலத்திற்கு வழிகேட்டால், ஊர்க்காவலன், "இங்கு பாதைக்குப் பாதை வித்தியாசம் இல்லை. எல்லாப் பாதைகளும் உற்சவ ஸ்தலத்திற்குத்தான் போகின்றன; நேரே போ" என்ருன். என்ன மடமை! பாதைக்குப் பாதை வித்தியாசம் இல்லாவிட்டால், இத்தனை பாதை கள் இருக்கவேண்டிய அவசியம்?

தாதாவின் கூட்டம் பாடிச் சென்றது—

**"என்மன்னன் என்னெஞ்சில் இருக்க,**
**எங்கும் காண்பேன் அவனை;**
**என்மன்னன் என்கண்ணில் இருக்க**
**எங்கும் காண்பேன் அவனை!**

**"மன்னன்சொல் கேட்கச்சென்(று) இன்(று)என்**
**பாட்டில் கேட்பேன் அவன்சொல்;**
**என்னெஞ்சில் வந்(து)என்கண் ணீரில்**
**பாராய் ஏந்தல் முகத்தை!"**

சிறிது நேரம் கழித்து அவ்வழி ராஜபவனி பெரு முழக்கத்துடன் வந்தது. மன்னன் எவன் என்பதை உணராதிருந்த மக்களை ஏமாற்றும் நோக்கத்துடன் ஸ்வர்ணன் போலி மன்னனுகை ஒரு கூட்டம் திரட்டிக்

கொண்டு, அறிவிப்பாளர், காவலர், படைபலம், சங்கீதம் புடைசூழக் கிளம்பினான். முதலில் அவனுக்கே நடுக்கம் தான், எங்கு புரட்டு வெளிப்பட்டு விடுகிறதோ என்று. ஆரம்பத்தில் சந்தேகத்துடன்தான் பார்த்தார்கள் மக்கள். ஆனால் அவனைச் சாரும் கூட்டம் கூடக்கூட அவர்கள் சந்தேகம் கரைந்தொழிந்தது. பார்ப்போரும் அவன் கூட்டத்தில் சேருவதையே பெருமையாகக் கண்டனர்.

முன்பட்டாளம் அறிவித்துச் செல்ல, அடுத்து போலி மன்னன் பவனி முழுகோலாகலத்துடன் வந்தது. மன்னனென ஒருவனைக் காணாத மக்கள் மன்னனென சொல்லிக் கிளம்பியவனை மன்னனென்றே ஒத்து, தங்கள் குறைகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர். இந்த நல்ல உற்சவத்தில் அவன் வெளிவந்தது அவன் நற்பண்பு என்று சிலாகித்து, தங்கள் காணிக்கைகளைக் கட்டினர். பவனி பவிசுடன் முன் ஏகியது.

ஆனால் தாதாவின் கூட்டத்திற்கு சந்தேகம் பலமாக ஏற்பட்டது—நம் மன்னன் இந்த இரைச்சலோடு வெளி வருவது ஏது? ஆடம்பரத்தில் அணி படுபவன் நம் மன்னன் அல்லவே! அவன் போகும் வழியில் அமைதி பரவுமே ஒழிய இப்படி இடி இரைச்சல் மேவாதே! மெழுகுப் பொம்மைபோல், அழகும் அலங்காரமும் சுமப் பவன் நம்மன்னன் அல்லவே. கிம்ஸுகப்பூக் கொடி அவனதல்ல; அவன் கொடியின் சின்னம் இடிதாங்கிய தாமரைப்பூ வன்றோ? அவனுக்கு முன்அறிவிப்பாளர், படைபலம், வால்கூட்டம், சங்கீதப் பட்டாளம் ஏதும் கிடையாதே. அறியாதே வந்து அறியாதே செல்பவ

னன்றே; இப்படி தனித்துத் தலைகாட்டி, காணிக்கைகளைத் தேடிக் கிளம்புபவன் அல்லவே!

* * *

அன்றைய உற்சவங்களில் பங்குகொள்ள வந்த மன்னர்களில் காஞ்சி மன்னன் கூர்மை மிக்கவன்; உல்லாச நந்தவனத்து மன்னர் குழாத்தோடு உலாவிக் கொண்டிருந்த வேளை, அவ்வழி பவனிவந்த போலி மன்னனின் உண்மையை தெள்ளிதில் உணர்ந்து கொண்டான். அவனைத் தனித்து இழுத்துச்சென்று பலாத்காரப் பயங்காட்டி அவன் போலித்தன்மையை ஒப்பவும் வைத்தான். நடுநடுங்கி தன் நாடகத்தைக் கலைத்துவிட்டு நாட்டை விட்டோட உயிர்ப் பிச்சை கேட்டான் போலி மன்னன். ஆனால்...காஞ்சியின் தந்திரக் கண்களுக்கு அவனால் ஒரு காரியம் ஆகும் என்றுபட, போலி மன்னனைத் தன் போலி நாடகத்தை தொடர்ந்து நடத்துமாறு உத்தரவிட்டான். இப்புது ஆதரவு கொண்ட போலி மன்னன் மிகுந்த பலிசுடன் தன் நடிப்பில் கிளம்பினான்.

* * *

அரண்மனையின் அடியில் அமைந்த இருட்டறையில் தான் ராணி சதர்சனையின் வாசம்; அவளுக்காகவே மன்னன் கட்டிய அறை அது; அவளை மன்னன் சந்திப்பது அங்குதான்.

இந்த இருட்டறை வாசம் அவள் நிம்மதியைக் குலைத்தது; நோய்ப்பட்ட சஞ்சலம் நொய்வாக அவள் நெஞ்சில் ஏறியது. தன்னை மணந்த கணவனைக் கண்ணால் இன்றுவரை கண்டதில்லை என்றால்...மனம் பொறுக்குமா? அவளை மணக்க வருபவன் உலகில் ஈடற்றவன்

என்று ஒரு ஞானி தன்னிடம் சொன்னதாக அவள் தாய் சொன்னதுண்டு. அது அவள் விவாகத்திற்கு முன் நடந்தது. தன் கணவன் இச்சீரோன் ஆகில் அவனைக் காணுதிருப்பது எப்படி?

அவன் இருட்டிலே வந்து இருட்டிலேயே செல்வான்; அவனைப் பற்றிப் பிறரிடம் எத்தனையோ தடவை அவள் வினவியும், அவர்கள் தெளிவான பதில் கூறியதில்லை.

இந்த இருட்டறையின் வாசல் எங்கு என்றுகூட அவளுக்குத் தெரியாது. அரண்மனையில் எத்தனையோ அறைகள் இருக்க, தன்னை இவ்விருட்டறையில் மன்னன் அடைத்து வைத்த மர்மம் என்ன?

என்னவாலும், வசந்த பௌர்ணமி பண்டிகை நாளான இன்று நிச்சயம் மன்னனை வெளிச்சத்தில் பார்த்து மகிழ்ந்து விடுவதென்று முடிவு செய்தாள். எனவே அன்று சேடி சுரங்கமையை இருட்டறையில் விளக்கேற்றச் சொன்னாள். ஆனால் சேடியோ மறுத்துச் சொன்னாள், ''ராணி, இவ்வறையிலும் விளக்கேற்றி விட்டால், வெளிச்சத்திற்கும் இருட்டுக்கும் வித்தியாசம் விளங்காமல் போய்விடும. இங்கு விளக்கேற்றக் கூடாதென்று ம்ன்னன் கட்டளையிட்ட காரணம் அதுவே. பின் அவன் கட்டளையை மீறுவதெப்படி? மேலும், வெளிச்சத்தில் நீ பிறரொடு பழகலாம்; ஆனால் மன்னனொடு பழக இருட்டன்றோ உகந்தது?''

சுரங்கமையின் இவ்விருட்டுச் சொற்கள் ராணியின் செவியில் ஏறவில்லை. ''சேடி, மன்னன் எப்படியிருப்

பான் என்றுகிலும் சொல். அவன் பெரும் அழகன் தானே?'' என்றுள் ராணி, தான் காணுததை சேடியின் வாயிலிருந்தாகிலும் உணரவேண்டி.

ஆனால் சேடி, "ராணி, மன்னன் அழகனல்ல; ஆனால் அபூர்வமானவன், சீரியன்'' என்று பதில் சொல்ல, அவள் இருட்டுப் பேச்சுக்கு எல்லை இல்லை என்றே பட்டது ராணிக்கு.

நல்லவேளை, அவ்விடை மன்னன் வந்தான். வந்தவன் நேரே கதவைத் திறந்து கொண்டு அறையில் நுழையக் கூடாதா? வேடிக்கை—வெளியில் நின்று கொண்டு, "நான் காத்து நிற்கிறேன், கதவைத்திற!'' என்றுன்.

கதவு எங்கிருக்கிற தென்று தெரியாக் காரணத்தால், சுதர்சனை சும்மா நின்றுள். சுரங்கமை சொன்னுள்—"மன்னு! உன் கதவை நீ வரமுடியாமல் பூட்டி வைப்போர் யார்? நீ தொட்டளவே திறப்பவையன்றோ இக் கதவுகள்.'' ஆனால் கதவு திறக்குமட்டும் காக்கும் மன்னன் மௌனமே சாதித்தான். எனவே சுரங்கமை கதவைத் திறந்து மன்னனை உள்விடுத்துவிட்டு வெளியே சென்றுள்.

மன்னன் வந்ததும் முதல் கேள்வியாக, "நாதா, நான் உம்மை வெளிச்சத்தில் காண ஏன் நீர் விடுவதில்லை?'' என்றுள் சுதர்சனை.

"தேவி, பிறவற்றை நீ வெளிச்சத்தில் காண்கிறுய்; என்னை இருட்டில் உணரலாகாதா?''

"இருட்டில் என்னத்தைக் காண்பது? ஏன், நீர் இருட்டில் என்னைக் காண முடிகிறதா?"

"ஏனில்லை, தேவி? எல்லையற்ற வானத்தின் இருட்டு என் அன்பால் உயிர்ப்பூட்டப்பட்டு எண்ணற்ற நக்ஷத்திரங்களின் எழிலொளியை ஏற்று சதையும் சாறுமாக உருப் பெற்றுவந்தது போலன்றோ நீ இருக்கிறாய்! உனக்கு ஆச்சரியமா யிருக்கிறதா? உனது இச்சீரிய அழகை உன்னால் காண முடியவில்லையா? நீ சாதாரண உயிரல்ல; எனது மறு உருவே நீ! உன் கண்ணாடி உன்னைச் சரியாகப் பிரதிபலிக்காது; அது உன்னைக் குறைத்துச் சுருக்கியே காட்டும். என் கண்கொண்டு உன்னைக் காண்; உன் எழில் வெளிப்படும்."

"நாத, உம் கண்களுக்கு இருட்டே கிடையாதா? என்ன விந்தை! இவ்விருட்டு எனக்குச் சாவு போலன்றோ இருக்கிறது. பின் இருட்டில் உமக்கும் எனக்கும் ஒருமை எப்படி உண்டாகும்? இல்லை, பரந்த வெளிச்சத்தில் உம்மை நான் பார்க்க வேண்டும்."

"தேவி, வெளிச்சத்தில் என் தோற்றத்தை நீ ரசிக்கமாட்டாய்; அது உனக்கு வேதனையே தரும்."

"உம் பேரழகைக் காண்பதில் வேதனை என்ன?"

"உனக்கு அவ்வளவு உறுதி யென்றால், நான் ஏன் தடுக்க வேண்டும்? ஆனால் நீயேதான் கூட்டத்தில் என்னைக் கண்டுகொள்ள வேண்டும்."

"நிச்சயம்; ஆயிரவர் மத்தியிலும் உம்மை லகுவில் தெரிந்து கொள்வேன்."

“சரி, இன்றைய இரவுக் கேளிக்கைகளின்போது, அரண்மனை மாடத்திலிருந்து என்னை அடையாளம் கண்டுகொள். கூட்டத்தில் அங்கு இங்கு எங்கும் தென் படுவேன்; பிழைக்காமல் கண்டுகொள்” என்று விட்டுப் போனான் மன்னன்.

* * *

அன்றைய முழுநிலா அழகு சொரிந்தது. உற்சவ உற்சாகம் வானைக் கிழித்தது.

மாடத்திலிருந்து மன்னனைத் தேடிக் கண் பரப்பிக் கொண்டிருந்த சுதர்சனை, ராஜவீதியில் பவனிவந்த போலி மன்னனைக் கண்டாள்; கண்டளவே அவனைத் தன் கணவன் எனத் துணிந்தாள். அவன் அழகு, அவன் ஜோதி, அவனது கிம்ஷுகப்பூப் பொறித்த கொடி, பவனியின் ராஜத்துவம் எல்லாம் அவள் துணிவுக்கு முத்திரை வைத்து, ஒத்துத் தோன்றின அவளுக்கு. எதற்கும் தீரத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைத்து, தோழி ரோஹிணியைக் கேட்டாள். தோழி தெருவில் ஏகி விசாரிக்க எல்லோரும் அவனே மன்னன் என்ன, அதை ராணியிடம் வந்து சொன்னாள்.

ராணியாகி மன்னனை அறியாதா போவாள்? கர்வத்தால் சுதர்சனை நெஞ்சு குளிர்ந்தது. அவன் எழில் அவள் நெஞ்சில் ஏக்கத்தைக் கிளறியது.

மன்னனுக்குத் திகைப்புண்டாக்க எண்ணி, தாமரை இலையில் பூக்கள் வைத்து தோழிவழி அனுப்பினாள்— பரிசாக.

தோழி பூக்களை எடுத்துச் சென்று போலி மன்னன் ...யில் சமர்ப்பித்தாள். என்ன ஆச்சரியம்! அவன் விளங்காது விழித்தான் வெறும் சிலையாகி! அடுத் திருந்த காஞ்சி மன்னன் கண்களுக்கு அர்த்தம் எல்லாம் புலர, புன்முறுவல் பூத்து, “மன்ன! ராணி சுதர்சனை யின் அன்பளிப்பு, காதற்பரிசு—ஏற்றுக் கொள்” என் ருன். போலி மன்னன் திடுக்கிட்டு, “இன்றைய என் பெருமைக்கு இது சிகரம் வைக்கிறது,” என்று பூக்களை ஏற்ருன். அவன் கழுத்து மாலையைக் காஞ்சி எடுத்து தோழியிடம் கொடுத்தான் வெகுமதியாக.

திரும்பி வந்து தோழி நடந்தவற்றைக்கூற, சுதர்சனை மனம் நைந்தாள்—“மன்னன் விளங்காது, அதை விளங்க வைக்க காஞ்சி மன்னஞ?” ஆனுல் நிகழ்ச்சி யின் கோரத்தின் முழு அர்த்தம் அவள் நெஞ்சில் பட வில்லை. அவன் எழில் ஏற்றிய ஏக்க நெகிழ்வின் அலைகளுடு உண்மைப் பிம்பம் உயிர் பெறவில்லை. தோழி பெற்ற மாலையை வாங்கித்தன் கழுத்தில் அணிந்து கொண்டு, அவன் முகத்தைக் கண் கொட்டாது பார்த்து நின்ருள்!

* * *

நடுநிசி கடந்தது. உற்சவத்தின் எதிரொலியாக எங்கும் செம்மை பாய்ந்திருந்தது. நிலவொன்று தான் தன் வெண்மையைக் காத்து நின்றது.

போலி நாடகத்தின் அடுத்த காட்சியாக காஞ்சி தீட்டிய திட்டம் போலி மன்னன் நெஞ்சில் திகிலூட்டியது. ஆனுல் காஞ்சியின் கைப்பொம்மையான பின் வழி ஏது?

அவன் சொற்படி அரண்மனை நந்தவனத்திலிருந்து ஆட்களை வெளியேற்றிவிட்டு, அதன் ஒருபுறத்தில் தீயிட்டு, அக்குழப்பத்தில் ராணி அறையில் புகத்துணிந்தான் போலி மன்னன் ஸ்வர்ணன்.

ஆனால் வைத்த தீ வைக்கோலில் போல் கணப்பொழுதில் எங்கும் பரவ, ராணியின் அரண்மனை வாயிலிலேயே அகப்பட்டுக் கொண்டனர் ஸ்வர்ணனும் காஞ்சியும். சதியைக் கைவிட்டு விட்டு, தப்பவழி பார்க்க நேர்ந்தது. ஆனால் வேற்றுவரான இருவருக்கும் வெளிச் செல்ல வழி தெரியாது போகவே, காஞ்சி ஸ்வர்ணனைக் கடிய, ஸ்வர்ணன் தன் போலிமையின் பூரண கோரத்தை உணர்ந்து நலிந்து, "மன்னா! காப்பாய்" என்று கதறினான்.

அதே கணம் அரண்மனைத் தீயிலிருந்து வெளியேறி ஓடிவந்த சுதர்சனை ஸ்வர்ணனைக் கண்டதும் உய்யும் வழி திறந்தாற்போல், "என் மன்னா! என்னைக்காப்பீர்" என்று பற்றினாள்.

"எவன் மன்னன்?" என்று நைந்து வெகுண்ட ஸ்வர்ணன் தன் ராஜ வேஷத்தைக் குலைத்தெறிந்து விட்டு அவ்விடத்தை விட்டோடினான்.

தனது ஈனத்தின், வெட்கச் செயலின் தகிப்பு தாங்காமல், எரியும் அரண்மனையில் எரிந்து புனிதப்பட எண்ணித் திரும்பினாள் சுதர்சனை.

அவ்விடை தோன்றிய மன்னன் ஸ்வர்ணனையும் காஞ்சியையும் சிறைப்படுத்தி அனுப்பி விட்டு, சுதர்சனையை மீட்டான், உயிர் மீட்டான். இந்த உய்வுக் காலத்தில் அவள் கண்ட காட்சி என்னே! தன் மன்னன்

கரியன், ஒரே கரியன், இரவு போல் கறுத்தவன்; சுற்றிச் சுடர் எழுப்பிய தீயின் ஒளிப் பட்ட அவன் மேனி, வால் நக்ஷத்திரம் புகுந்த கருவான் போன்றும், அந்தி வெளிச்சம் பயிலும் அலைகடல் போன்றும் தோன்றியது. மன்னனிடமிருந்து மனம் கோணினாள் சுதர்சனை.

மீட்கப்பட்டு இருட்டறை மீண்ட சுதர்சனை எண்ணினாள்—"இனி மன்னனோடு எனக்கு உறவு இல்லை. என் அன்பு புது வழியில் பாய்ந்துவிட்டது; அழகின் வசமாகி விட்டது. பின் இக்கரியனோடு வாழ்வதெங்கே? ஷிரிஷப் பூவின் மென்மையும் வண்ணாத்திப் பூச்சியின் வண்ணங்களும் சார்ங்தோனைக் கண்டபின்னர், இக்கரியனை... நான் சகியேன். இவனை விட்டு ஓடுவதே இனி உய்வு... அவமானச் சின்னமான 'அவன்' மாலைகூட என் கழுத்தில் என்ன அழகாகக் கிடக்கிறது! அதைக் கழற்ற இச்சை இல்லை..."

* * *

மறுநாள் வந்த மன்னன் சொன்னான்—"ராணி, அஞ்சாதே. நேற்றையத் தீ உன்னைக் கலக்கி விட்டது. அதன் எதிரொலிப்பாக உன் உடலே துடித்து எரிகிறது. சாந்தம் கொள், சீக்கிரமே நீ தன்னிலை யடைவாய். நீ என் தோற்றத்தை தாங்க மாட்டாயென்று சொன்னேன். நீ அவசரப்பட்டாய். கொஞ்சம் கொஞ்சமாக உன்னைப் பக்குவமாக்கித் தயார் படுத்தி என்னை உனக்குஅறிவிக்க எண்ணினேன். உன் அவசரம் புதுப் பிரச்னை உண்டாக்கி விட்டது. பரவாயில்லை; நீ கண்ட என் கருமையே நாளடைவில் உன் ஆறுதலாகவும் விமோக்ஷனமாகவும் அமையும், என் அன்பின் சக்தியால்."

சட்டென்று மறுதளித்தாள் சுதர்சனை — "மன்ன! என் அன்பின்றி உன் அன்பு என்ன செய்யும்? உன் கருமையை நான் தாங்கேன். இன்றே போகிறேன் உன்னை விட்டு."

"ராணி, அழகு கானல் நீர் போல் பொய்யானது, குமிழிபோல் வெறுமை கொண்டது."

"உன் கருமை முன் நான் இனி நிற்கமுடியாது."

"அப்படியானல், நீ செல்லலாம்; நீ சுதந்திரப் பிராணி."

"என்ன, நான் போவதை நீ தடுக்க மாட்டாயா? பலாத்காரமாக என்னைப் பிடித்து நிறுத்த மாட்டாயா? உன் எதிர்ப்பற்ற மௌனம் என்னைக் கிறுக்காக்குகிறது. சக்தியற்றவன்போல் சரி என்கிருயே!"

"ராணி, உன்னைத் தடுப்பாரில்லை. நீ போகலாம்—சுதந்திரமாக எங்கும்—குமுறிய வானில் புயலூக்கும் மேகம்போல," என்று விட்டுச் சென்ருன் மன்னன்.

அக்கணம் அங்கு வந்த சேடி சுரங்கமை நடந்தது உணர்ந்து சொன்னுள்—"ராணி, மன்னன் கருணை மலிந்தவன். சிறைப்பிடித்த காஞ்சியையும் ஸ்வர்ணனையும் விடுதலை செய்து புகழ்ச் சிகரம் ஏறியவன். இன்று நீ அவனை விட்டுச் செல்கிருய். நானும் உன்னுடன் வருகிறேன்; தடுக்காதே."

சுதர்சனையின் மறுப்புக்களைப் பொருட்படுத்தாது, சுரங்கமை அவளோடு நாட்டை விட்டுக் கிளம்பினுள்.

* * *

நாயகனை நீத்து வந்த மகளை அன்போடு நோக்க வில்லை அவள் தந்தை கன்யாகுப்ஜன். கற்புச் சின்னம் கலைந்தவளை வரவேற்றுக் களங்கம் பெருக்கக் கருதாமல், ஒரு வேலைக்காரியாகவே அவளை அரண்மனையில் அமர்த் தினான்—அவ்வளவுதான் அவன் கடமை. வழி தவறிய பெண்ணை அவள் தீமையின் அறிகுறி; அவள்பின் வரும் எந்த அபாயம் அவன்மீது படருமோ என்று பயந்தான்.

பெருங் கருத்துக்களோடு பிறந்த வீடு வந்த சுதர்சனை தன் கதியை நினைத்து வருந்தினாள். தூசி துடைத்து, வேர்த்து வேலை செய்யவா, ராணிப் பவிசை அவள் உதறியது? என் வீழ்ச்சி வெறும் காய்ந்த இலை வீழ்ந்தது போலாயிற்றே! என் தந்தை ஒரு ஈனன்—என்னை இப்படி அவமானப்படுத்த. என் 'மன்னன்' ஒரு ஈனன்—என்னை மீட்க வராமல் தொலைந்து போக. ஏன், அம்மன்னனும் ஒரு ஈனன்—நான் அவன் நாட்டை விட்டுக் கிளம்பியபோது, பேச்சுக்காகக் கூட என்னைத் தடுக்கவில்லை; அரண்மனைக் கதவுகள், நகரக் கதவுகள், நாட்டுக் கதவுகள் எல்லாம் திறந்தன, நான் போக. அவன் கல்நெஞ்சன், உணர்ச்சி யற்றவன்; ராணிக்கும் இழி ஏழைக்கும் வித்தியாசம் தெரியாதவன்—ஈனன், கொடியன், கல்லன.

மறுதிமிடம் சுதர்சனையின் நம்பிக்கையைக் கிளறி எழும்பியது, தூரத்தில் தூசி. கொடியோடு வந்த தேரின் முழக்கம் அடுத்துக் கேட்டது. மன்னன் தன்னிடம் மன்னிப்புக் கேட்டு அழைத்துச் செல்ல வருவதாக நினைத்து கர்வப்பட்டாள்.

ERSITY EXTENSION LI

ஆனால் சுரங்கமையின் மறுப்பு—"என் மன்னன் தூசியைக் கிளறிக் கொண்டா வருவான்? அவன் வருவதும் போவதும் யாருக்குத் தெரியும்" என்ற பேச்சு அவள் ஆத்திரத்தைக் கிளறியது.

ஆனால் உண்மை தெரிந்தபின் வெட்கப்பட்டாள்; ஆனால் மறு நிமிடம் உவகை பூண்டாள். ஆம், வந்தவன் அவள் ஜோதி "மன்னன்." காஞ்சியோடு அவளை இழிவினின்றும் மீட்கும் பணியில் வந்துள்ளான். என்ன வீரம்!

சுதர்சனை நாடு நீத்தமை அறிந்த காஞ்சி அவளை அடையும் நிலைப்பூறி, ஸ்வர்ணனை உடன்கொண்டு—ஸ்வர்ணன் மீது சுதர்சனை மனம் விட்டதுணர்ந்தவன் அவன்—அவளைப் பின் பற்றினான். அவள் தந்தை அவளை வேலைக்காரியாக்கியது அவனுக்கு நல்ல சாக்கு கொடுத்தது. அவளை அவள் இழிவினின்றும் ஈடேற்றுவதாக சவால் விடுத்தான்.

இவ்விடை, உற்சவத்திற்கு வந்திருந்த கோசல, அவந்தி, முதலான மன்னர்களும், சுதர்சனை மீது இச்சை கொண்டு, தங்கள் முழுப் படைகளுடன் வந்தது காஞ்சியின் கணக்கைக் குலைத்தது. ஆனால் தந்திரப் புலி அவன், முதல் எதிரியான சுதர்சனையின் தந்தையை வீழ்த்த அனைவரும் முதலில் முனைவோம் என்று அவர்களைத் தன் வழிப்படுத்தினான். இந்தச் சிக்கல்களிலிருந்து விடுதலைபெற ஸ்வர்ணன் விழைந்தபோது, காஞ்சி, "பொறு, உன்னால் எனக்காவதொன்று உண்டு" என்று தடைசெய்தான்—ஆம், ஸ்வர்ணன் சாயலிருந்

தன்றே தான் சுதர்சனையைப் பெற வேண்டும்! அவன் இஷ்ட கஷ்டங்களுக் கிங்கு இடமேது? நடந்து ஏற உபயோகப்படும் பாதையும் படியும் மிதித்துச் செல்ல வன்றே அமைந்தவை! ஸ்வர்ணனும் அவனுக்கு ஒரு பாதை, ஒரு படி—சுதர்சனையை அடைய!

சுதர்சனைமீது கண்வைத்து போரிட்ட மன்னர்கள் ஒரு நொடியில் அவள் தந்தையை முறியடித்து சிறை பிடித்தனர்.

கபடன் காஞ்சி பின் ஒரு'வழி சொன்னன்—அனை வரும் வேண்டு மென்னில், ஒரு சுதர்சனை என்ன செய் வாள்? அவளை மீட்டு மீண்டும் அரண்மனையில் அமர்த் திய அவர்களில் அவளுக்கு எவன் மீது இஷ்டமோ அவனுக்கு மாலையிடட்டும். ஆம், சுயம்வரம் அவள் உரிமை. அவள் தீர்ப்பு முடிவானது; தோற்ற மன் னர்கள் பின் சும்மா போய்விட வேண்டும், சச்சரவு செய்யாமல். எல்லோரும் சரி என்ருர்கள்.

காஞ்சி காரியத்தில் சரியாகவே இறங்கினன்—ஸ்வர்ணனை முழுக்க அலங்கரித்து சுயம்வர மண்டபத் தில் தனக்குக் குடைபிடிக்க வைத்தான். ஸ்வர்ணன் மீதுள்ள பாசத்தால், சுதர்சனை அவன் பிடித்த குடைக் கீழ் தன் கழுத்திலே மாலையிடுவாள் என்று திண்ணமாக எண்ணினன். ஆனல் அவன் துரதிர்ஷ்டம், சுயம்வர வேளையில் சுதர்சனை நுழைவதற்குப் பதில் தாதா போருடையில் தளபதியாகத் தலைகாட்டினன்.

"மன்னன் வந்துவிட்டான்" என்ற அவன் செய்தி மன்னர் குழாத்தில் பீதி பரப்பியது. இந்த 'மன்னன்' எவன் என்று அவர்களுக்கு நன்கு தெரியும்.

"மன்னன் தன்னிடம் வர உங்களைக் கட்டளையிடு கிருன்" என்ற தாதா தளபதியின் அடுத்த சொல்லுக்கு மன்னரெல்லாம் ஏறக்குறைய தலை பணிந்தனர். ஆனால் காஞ்சியின் வீர எதிர்ப்பும், சதர்சனை மீதுள்ள இச்சையும், அவர்களை மறுபடியும் காஞ்சியின் தலைமையில் இன்னொரு போரில் இறங்க வைத்தன. ஆம், எட்டிய கனியை எடுக்காது போதல் முட்டாள்தனமன்றோ!

* * *

சுயம்வரத்திற்கு ஜோடிக்கப்பட்ட சுதர்சனையின் மனம் சோதனை வயப்பட்டது. ஸ்வர்ணனை விழைந்து விட்டு, அவன் கோழையாகக் குடைபிடிக்கும் மண்டபத்தில் அடிவைக்கக் கூசினாள். அவள் அவமானத்தின் சிகரக் கட்டமாகப்பட்டது இந்த சுயம்வரக் கூத்து. கணவனை நினைத்துக் கதறினாள்—"மன்னா! என் ஒரே மன்னா! என்னை மறந்தாயோ? என் நெஞ்சை நீ உணராயோ? நான் களங்கப்பட்டது உண்மை; ஆனால் நெஞ்சுவரை கறை பரவவில்லை. என் நெஞ்சு நீ எனக்களித்த இருட்டறை போன்றது; அதில் நுழைந்தோர் நீயன்றி எவருமில்லை! பின் அதை ஆக்கிரமிக்க நீ வாராயோ?"

அவ்விடை தாதாவின் வரவால் சுயம்வரம் தடைப்பட மகிழ்ந்தாள்.

பின் மன்னர்குழாம் போர்க்களம் ஏக, போர் முடிவை எதிர்பார்த்து ஆவலுடன் நின்றாள்.

நல்லவேளை, மன்னர்குழாம் முறிவுற்று சிதறியது. மன்னன் வென்ருன்—தன் உய்வு பிறந்ததென்று மகிழ்ந் தாள் சுதர்சனை.

மன்னன் வரவை எதிர்பார்த்துக் களிப்பால் நெஞ்சு துடித்தாள். அவனை எப்படி நேர்படுவதென்ற பயம் கூட. சுரங்கமையைக் கேட்டாள். "தாழ்வோடும் தணிவோடும் செல்; உன் வெட்கமும் அவமானமும் பறந்து போம்" என்ருளவள்.

"சரி" என்று மனதைத் தைரியப்படுத்திக் கொண் டிருந்த வேளையில் நுழைந்தான் தாதா. போர் முடிந்த பின் மன்னனைக் காணேம் என்றறிவித்தான். இந்த அதிர்ச்சியின் தாக்குதல் சுதர்சனை நெஞ்சை வேதித் தது— "எவ்வளவு கொடியன்! கல்நெஞ்சும் பிடிவாத மும் சேர்ந்தவன்! என் நெஞ்சு குலைந்தும் இவன் நெஞ்சு அசையவில்லை. பார்க்கலாம் இவன் கொடுமையின் முடிவை" என்று நெகிழ்ந்தாள்.

* * *

மன்னனை மறுபடி இழந்த சுதர்சனை யோசனையில் ஆழ்ந்தாள். அவள் கர்வமே அவளுக்கு எதிரியானதை உணர்ந்தாள். மன்னன் தன்னிடம் வரவேண்டும் என்ற அவள் எண்ணம் எவ்வளவு தவருனதென் றுணர்ந்தாள். தானன்றே அவனிடம் செல்ல வேண் டும். இரவெல்லாம் புரண்டு படுத்து அழுத வண்ண மிருந்தாள். அவள் நெஞ்சு வேதனை மிஞ்சியே சென் றது. அவள் பெற்ற தோல்வி அவள் கண்ணைத் திறந்

தது, அவளை இழிவினின்றும் விடுவித்தது, வெற்றிக்கு வழி காட்டியது.

அவன் வரும்வரைக் காப்பது இனி ஏது? தானன்றோ அவனிடம் செல்ல வேண்டும்—தாழ்வொடு, பணிவொடு, தகைமைக் கர்வமின்றி.

புறப்பட்டாள்—இருட்டையும் பொருட்படுத்தாது. மன்னன் அழைப்பின் தீவிரம் அவளை இழுத்தது. நகையின்றி நடையாகவே கிளம்பினாள், துணைக்கு சுரங்கமை ஒருவளே வர. அவனைக் கண்டதும் முதல் வார்த்தையாக, "நான் நானாகவே வந்து விட்டேன், உன் வரவை எதிர்பார்க்காமல். உனக்காக கல்மீதும் முள்மீதும் கதறி வந்திருக்கிறேன்" என்று சொல்ல உறுதி கொண்டாள்.

நிஜம், புண்பட்ட கர்வத்தை அவள் போற்றியவரை, அவன் தப்பு செய்தான் என்றே நினைத்தாள். கர்வத்தைக் கலைந்து, பரந்த வெளியில் அவனுக்காகப் பயணம் கிளம்பியதும், அவனும் தன்னை நாடிக் கிளம்பியதாகவே உணர்ந்தாள். ஒவ்வொரு எட்டிலும் அவனை உணர்ந்தாள். அவளது இருட்டுப் பிரயாணத்தில் அவன் துணை தருவதாக உணர்ந்தாள். அரண்மனை இருட்டறையில் அவன் தீண்ட எழும் சிலிர்ப்பு இன்று அவள் உடலில் திரண்டு வந்தது.

உதயகாலம் வானத்தில் செம்மை பூசி உதித்தது. சுற்றிலும் பூக்கள் மணம் வீசி விரிந்தன.

அடுத்தெழுந்த சூரியன் சுதர்சனையை அரண்மனைக்குள் வரவேற்றான். ஆம், இருட்டைக் கடந்து வெளிச்

சத்தில் வந்து விட்டாள் அவள். கர்வத்தைவிட்டுத் தாழ்மை பெற்று விட்டாள் அவள்.

இந்த மாற்றத்தை மண்மீதும் கல்மீதும் நடந்தே நாட்டினுள்; எளிய உடைகள் கொண்டே சாதித்தாள்.

ஆம், மறுபடியும் அவளை ஏற்றான் மன்னன். "மன்னு! என்னை உன் சேவகியாக ஏற்றுக்கொள். உன்னை உல்லாசப் புரங்களில் காண விரும்பி நான் பொய்த்தேன். இனி என் இச்சைகள் ஓய்ந்தன. நீ அழகற்றாய்; ஆனால் ஈடுமற்றாய்" என்று சமைந்தாள்.

"இல்லை, எனக்கு ஈடு உன்னில் இருக்கிறது" என்றணைந்தான் மன்னன்.

"அப்படி என்னில் இருப்பதும் உன்னதுவே" என்று நெருங்கினுள் சுதர்சனை.

"ராணி, நீ உணர்ந்து விட்டாய், ஒளிபெற்று விட்டாய். இனி வேண்டாம் இருட்டறை வாசம் உனக்கு. வா, என்னிடம் வெளியில், வெளிச்சத்தில்" என்று கைப்பிடித்து அழைத்தான்.

"நில், மன்ன! என் ஈடற்றோனை இறுதியாக இங்கு வணங்கிக் கொள்கிறேன்" என்று பணிந்தாள் சுதர்சனை.

# சண்டாளி

ப்ராக்ருதி தீண்டப்படாத ஜாதியின் அடித்தளமான சண்டாளி வகுப்பை சேர்ந்தவள்.

அன்று அரண்மனை மணி நடுப்பகல் அடித்தது. வெயில் கடும் தாக்குதல் தாக்கியது. ஊருக்கு வெளியில் தன் குடிசையருகே இருந்த சேரிக்கிணற்றில் அவள் கன்றைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவ்வழி சென்று கொண்டிருந்த ஆனந்தன், புத்தனின் சிஷ்யன், அக்கிணற்றருகே வந்தான். "பெண்ணே, நீர்கொடு" என்றான். அவள் நெஞ்சு குதித்தெழுந்தது. காவி உடை தரித்த அவனை வணங்கினாள். காலையொளியின் அழகோடு ஜொலித்தான் பிக்ஷு. "ஐயா, நான் சண்டாளி; என்கைப்பட்ட கிணற்றுநீர் சுத்தமற்றது" என்றாள் பயத்தோடு.

"பெண்ணே, நீ சொல்வது தவறு. மழைகாலத்து கருத்த மேகங்களை சண்டாளி என்று பேரிட்டழைத்தால் என்ன? அப்பேர் அவைகளின் குணத்தையோ, நீர் சுரக்கும் தன்மையையோ, அல்லது அவைகளிலிருந்து வரும் நீரின் பெருமையையோ மாற்றிவிடுமா? உன்னை நீயே குறைத்துக் கொள்ளாதே; அது தற்கொலையிலும்

மிஞ்சிய குற்றம். நான் மனித ஜென்மம்; நீயும்தான். இருவரும் ஒரே குலம். வெயிலைத் தணித்து தாகத்தை தீர்க்கும் எல்லா நீரும் சுத்தநீர்தான்'' என்றான் ஆனந்தன்.

வாழ்க்கையில் முதல் முதலாக இச்சொற்களைக் கேட்ட அவள் நெஞ்சு நெகிழ்ந்தது, விரிந்தது. அவன் கைகளில் நீர் ஊற்றினாள். அவன் பருகினான்.

''ஜானகியும் இப்பேர்ப்பட்ட நீரிலேயே குளித்தாள். வனவாசத்தின் முதல் கட்டத்தில் சண்டாளன் குகன்தான் அவளுக்கு நீரிறைத்துக் கொடுத்தான்'' என்றான் ஆனந்தன்.

தாய் சொல்லிக் கொடுத்திருந்தாள் அவளுக்கு—''கெட்டவிதி உன்னை இந்த ஜாதிச் சகதிக்குள் தள்ளியிருக்கிறது. அது உடைக்க முடியாத தடங்கல் சுவர். நீ சுத்தமற்றவள்; பிறரை உன் அசுத்தத்தால் கறைப் படுத்தி விடுவாய், ஜாக்கிரதை. உன் இடத்திற்குள் இருந்துகொள். அது குறுகியதுதான்'' என்று.

ஆனால் பிக்ஷுவின் மொழிகள் அவள் நெஞ்சில் புதுப்பாடம் புகட்டின. அவள் உணர்ந்தாள்—அவளும் கொடுக்க முடியும் என்று; அல்லது அவன் ஏன் ''பெண்ணே, நீர் கொடு'' என்றான்? பிறர் இந்த உண்மையை மதத்தின் பேரால் அவளிடத்திலிருந்து மறைத்து வைத்திருந்தனர். கண்ணைக் கட்டி மூச்சைத் தடுக்கும் ஒரு ஜாதிக் கொள்கையில் அவளைத் தள்ளி வைத்திருந்தனர். ஆனால் அவை பொய் என்றுணர்ந்தாள். இழிவு வகுக்கும் மதம் பொய்மதம்.

அவன் போனுன்.

ஆனுல் அவள் புது வாழ்வு பிறந்து விட்டது. தான் தள்ளப்பட்ட ஜாதிக் குப்பையிலிருந்து எழுந்தாள். மனிதப் பிறப்பின் முழு உரிமையும் தனக்கு உண்டென்றுணர்ந்தாள்.

நினைத்தாள்—"இந்த ஊரில் வேறு நீரே கிடையாதா? என்கிணற்றை நாடி அவன் வரவேண்டிய காரணம்? நிச்சயம், அது என் புது வாழ்வுதான். தாகத்தைத் தீர்க்கும் பெருமையை எனக்கு அளிக்கவே வந்தான். அந்தப் புனித வேலையாகத் தான் இங்கு வந்தான். அவனது அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் நீர் அவனுக்கு வேறெங்கும், புண்ய தீர்த்தத்திலும்கூட, கிடைக்காது.... நான் ஊற்றிய ஒரு கை நீர் பரந்து ஆழமற்ற வரையற்ற கடலாய் விரிந்து, ஊமெல்லாம் பாய்ந்து, என் ஜாதியை அழித்து, என் பிறப்பை புனிதப் படுத்தியது" என்று.

நாட்கள் சில கழிந்தன. அவன் கற்பித்த கொடுக்கும் சக்தியை முழுதும் சமர்ப்பிக்க இச்சை தோன்றியது அவளுக்கு. அவள் பெரிதாய் கொடுக்கக் கூடியது அவளையேதான். அவள் சமர்ப்பணைக்கு முழுதும் தகுதியானவன் அந்த பிக்ஷு தான். அவன் அவளைப் புதிதாகப் பிறப்பித்தான்; அவள் அவனிடம் சமர்ப்பணமாக விழைந்தாள். அவன் வருகையை எதிர் பார்க்கலானுள்.

அரண்மனை நடுப்பகல் மணி அடித்தது. வெயில் கடுமை கொட்டியது. மரக்கொப்புகளில் காகமும் அசையாது இருந்தது. அவள் குடத்தோடு கிணற்றருகே உட்கார்ந்தாள். நீருக்கு வந்த பெண்கள் போய்விட்டனர்.

பிக்ஷு வருவான் என்ற எதிர் பார்ப்பில் இருந்தாள். நாட்கள் கழிந்தும் அவன் ஏன் வரவில்லை? அவள் நெஞ்சு நீர் வறண்டு, அனற்காற்று வீசும் பொட்டலாகிக் கொண்டிருந்தது.

அவளைத் தேடிக்கொண்டு அவள் தாய் வந்தாள். "என்னடி, வெயிலில் தவங்கிடந்த உமை மாதிரி இருக்கிருய். யாரை நாடி?" என்றுள்.

"அம்மா! 'பெண்ணே, நீர் கொடு' என்று கேட்டானே, அவனை நாடித்தான். நானும் அவனும் ஒரு குலமே என்றுன் அவன். அதைக் கேட்ட அளவே நெஞ்சு மலர்ந்தது. அம்மா! அவனுக்கு எவ்வளவு தைரியம்! என்ன சாவதானமாக சொன்ஞன் 'நீர் கொடு' என்று, யாரும் சொல்லாத வார்த்தையை! அச்சொற்கள் என் வாழ்க்கையில் விளக்கேற்றி, என் நெஞ்சைத் தடுக்கி நின்ற பாறையை உருட்டி விட்டது. இன்பம் கொந்தளித்தது. காலையெல்லாம் ஊரில் பிச்சை வாங்கிவிட்டு, பொட்டல்களையும் சுடுகாட்டையும் நீரோடையையும் தாண்டி, நீர்க்காக என்னிடம் வந்தான், 'பெண்ணே, நீர்கொடு' என்று சொல்ல. என்ன விந்தை! அடக்கப் பட்ட எளியளாய என்மீது என்ன அன்பு, என்ன பவிசு! அவன் சொன்ன அளவே உணர்ந்தேன், கொடுக்க என்னிடம் நீர் இருக்கிறதென்று. அதை முழுக்கக் கொடுத்து விடுவதற்காகவே காத்திருக்கிறேன்" என்றுள் ப்ராக்ருதி.

"மகளே, நீ சொல்வது விளங்கவில்லை."

"கற்பித்த அவனே விளக்குவான்; அதற்காகவே இங்கு காத்திருக்கிறேன்."

"உனக்கு என்னடி வேண்டும்? விளக்கமாகச் சொல்."

"அவன் வேண்டும். எதிர்பாராதே வந்தான், இப் பெரிய உண்மையைக் கற்பித்தான்—என் சேவையும் கடவுள் ஏற்கக் கூடியதென்று. நஞ்சுச் செடியில் உதித்த நானும் அவன் பூஜைப்பூ ஆகலாமென்று. அப்பூவை மண்ணிலிருந்து எடுத்து அவன் மார்பில் வைத்துக் கொள்ளட்டும்."

"பெண்ணே! உன் பெண்மை மலர்ந்திருக்கிறது. நீ சமர்ப்பணம் ஆகவேண்டியவள். அன்று இவ்வழிப் போந்த இளவரசன் உன்னை அழைத்தான் அவன் அந்தப் புரத்திற்கு. நீ மறுத்தாய். அது உன் தவறு."

"அம்மா! அவன் நான் மனித ஜென்மம் என்பதையும் மறந்தான். வேட்டையாடச் சென்ற மிருகத்தைப் போல ஒன்றை என்னிடம் கண்டானே ஒழிய என்னைக் காணவில்லை. ஆனால் நீர் கேட்ட அவன் என்னை என்னாகவே உணர்ந்தான். அவனே எனக்கு வேண்டும். என் வாழ்வை மலர்க்கூடையாக அவன் பாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும்."

"அப்படியானால் சரி, மகளே! அவனிடம் சென்று வாவென்றழைத்து வருகிறேன்."

"இல்லையம்மா. அவனை வெளியிலிருந்து அழைத்து லாபமில்லை. என் குரல் அவன் ஆத்மாவில் கேட்க வேண்டும். நான் என்னைக் கொடுக்க விரும்புகிறேன். என்னை ஏற்பவன் யார்? யமுனையின் கருநீரோடு கலக்கும் கங்கைபோல அவன் ஆசையை என்னோடு கலக்

கட்டும். வறண்ட நெஞ்சில் ஒரு குடம் நீர் பாய்ந்து பிர யோஜனமில்லை. வானில் தானுகவே திரண்டு கருமேகங் கள் தங்கள் கனத்தாலே என் நெஞ்சில் மழையாக இறங்கி மலர்ப்பிக்கட்டும்.''

''மேகம் வந்தால் வரும், இல்லாவிட்டால் இல்லை— வறண்டு கிடக்கும் பயிரைப்பற்றி அவைகளுக் கென்ன அக்கரை ?'' என்ருள் தாய்.

''அம்மா, அவைகள் வந்துதான் தீரவேண்டும். உன் மந்திர சக்தியைப் பிரயோகித்து அவன் மனதில் அவனுக்கு என்மீது இச்சை எழுப்பி, அதன் இயக்கமாக என்னிடம் வரும்படி செய்.''

''என்னடி சொன்னுய், முட்டாள்? ஒரு பிக்ஷுமீது மந்திர சக்தி பிரயோகிப்பதா? தீயோடா விளையாடச் சொல்கிருய்?''

''அம்மா, நீ அவனை அழைத்துத்தான் ஆகவேண் டும். என் தைரியத்தைப் பார், என் திடத்தைப் பார். எல்லாம் அவன் செய்த விந்தை. அவன் வேண்டும். உன் மந்திரத்தை துவக்கு.''

அப்பொழுது புத்த பிக்ஷுக்கள் கூட்டத்தின் முன் தலைமை தாங்கி ஆனந்தன் பாதையில் பாடிக்கொண்டு சென்ருன்—

**''சுத்த புத்தனே! கருணைக் கடலே!**
**மெத்த வித்தகா! மேனித் துயரின்**
**சத்த சங்க்ரகா! சரணம், சரணம்!''**

''அம்மா, அதோ தலைமை தாங்கும் பிக்ஷு, அவன் தான். உடனே அழை,'' என்று உணர்ச்சியோடு கூறி ஞள் ப்ராக்ருதி.

"யார், ஆனந்தனையா சொல்கிறாய்? புத்தனது பிரதம சிஷ்யனையா? பெண்ணே, அவன் உன் பக்கம் பார்க்கவும் இல்லை, உன் கிணற்று நீரை நினைக்கவும் இல்லை. நீ உன் பிரமையைக் கலைத்துக் கொள். உலகைத் துறந்தவன் அவன், உள்ளத்து உள்ளொளியில் திளைப்பவன் அவன்."

"அம்மா, நாளுக்கு நாள் என் ஆசை பெருகுகிறது; நிமிஷத்திற்கு நிமிஷம் என் நாணம் தளர்கிறது. என் நெஞ்சில் சிறைபட்டிருக்கும் இந்த ஆசைப் பறவை இறக்கைகளை அடித்துத் துடிக்கிறது—அது பிரமையா?"

"சரி, மகளே! உன் ஆசையின் முழு மூச்சுக்கு முன் என் மனம் கரைகிறது. நான் என் மந்திரத்தைப் பிரயோகித்து அவனை உன்னிடம் இழுக்கிறேன்."

"ஆம் அம்மா, அவன் சிந்தனை உலர்ந்த இலைகள் போல் உதிரவேண்டும். அவன் கைவிளக்கணைந்து பாதை இருளவேண்டும. புயலில் கூடுடைந்து, நள்ளிரவில் கொல்லையில் விழும் பறவைபோல், அவனும் உன் மந்திரத்தில் சுற்றப்பட்டு என் மடியில் விழவேண்டும். என் நெஞ்சுத் துடிப்பில் அவன் இறுகவேண்டும்; என் மனமின்னலில் அவன் கரையவேண்டும். என் ஆசை அலையில் அவன் நுரைக்க வேண்டும்."

தாயின் மந்திரப் பிரயோகம் ஆரம்பமாயிற்று. வானெலாம் மூடிப் பரந்த பனி அசுரர்களோடு யுத்தமிட்டுக் களைத்த தேவர்களைப் போல் வெளுத்திருந்தது. இங்குமங்கும் தீக்கற்றை தென்பட்டது. அச்சூழ்நிலையில் தென்பட்டான் ஆனந்தன். மறு நாள் வானெலாம்

இருண்டு இடையிடை மின்னியது. ஆனந்தன் தூய்மை சிறிது தளர்ந்தது. மந்திரத்தின் மாயம் அவன் நெஞ்சை ஆட்டியது. வாட்டம் அவன் முகத்தில் சூழ்ந்தது.

மந்திரக் கண்ணாடியில் இவற்றைக் கண்டு கொண்டிருந்த ப்ராக்ருதிக்கு பயம் உண்டானது. நாசக் கடவுளின் ஆட்டத்தை சிருஷ்டிக் கடவுள் முழு பலத்தோடும் எதிர்த்து நின்ற கோலம் பயங்கரமாயிருந்தது. நாசத்தின் பலம் மெல்ல மெல்ல கையோங்கியது. அவளுக்கு திருப்தி. ஆனந்தனின் மனம் அசைவுபட்டது; அவள் இன்பப் பொருள் நெருங்கித் தென்பட்டது. ஆனந்தன் தூரத்தை நோக்கினான். அவன் கண்கள் சிவந்தன. கோபக்கனல்கள் கக்கினான்; மனதைக் கட்டுப் படுத்த முடியா பலவீனத்திற்கு தன்னையே வெகுண்டான். அவன் சஞ்சலம் ப்ராக்ருதிக்கு தன் சஞ்சலத்தோடு இணைந்து ஒருமை காட்டியது. தனக்கு முக்தியின்றி அவனுக்கு முக்தியேது?

ஆனந்தன் இரவில் யாரும் அறியாமல் வைசாலி மடத்திலிருந்து கிளம்பினான், ப்ராக்ருதியை நோக்கி. ஆறுகள், மலைகள், பொட்டல்கள் தாண்டினான் தனியாக. மந்திர பலம் அவனை மேலும் மேலும் தாக்கியது. அவன் உள்ளக் குமுறல் அணைபட்டது. அவன் உடல் தளர்ந்தது, முகம் வெளுத்தது, கண்கள் ஒளிமங்கின. நன்மை தீமை என்ற நினைப்பிழந்து, நிஜம் பொய் என்ற உணர்வு ஒழிந்து, மந்திரக் கட்டாயம் ஒன்றே தாக்க, நடந்து வந்தான்.

வழியில் உபாலி நதிக்கரையில் புத்தன் சுப்ரப மன்னனுக்கு போதித்த இடத்தில் எழுப்பியிருந்த மேடையில் உட்கார்ந்தான். கண்களைப் பொத்திக்கொண்டு மனக் கிளர்ச்சியில் நடுங்கினான். ப்ராக்ருதிக்குப் பயம்—வந்தவன் மீண்டு விடுவானோ என்று. இவ்வளவு நெருங்கி வந்தவனை இழக்க அவள் தயாராயில்லை. "அம்மா! மந்திரத்தை இன்னும் இறுக்கு" என்றாள். மந்திரக் கண்ணாடியைப் பார்க்க அவளுக்கு மனமில்லை. உபாலி நதிக்கரை புத்த போதனை அவனை மீட்டுச் சென்றிருந்தால்? அவன் தன்னிடமிருந்து விலகிப் போனால்? இல்லை, அவன் வரவைக் காதால் கேட்கத் துடித்தாள். நள்ளிரவாகி விட்டது. அவன் வரவுக்கு எல்லாம் தயார் செய்யப் பட்டிருந்தன.

தாயின் மந்திரம் இன்னும் இறுகியது; அதன் பிடிப்பில் அவள் உயிரிழந்தாள்.

மறுகணம் ப்ராக்ருதியின் வாசலில் ஆனந்தன் தோன்றினான். அவன் ஒளி, தூய்மை, சுடர் எங்கே? தேய்ந்து, மெலிந்து, அவன் பண்பையே இழந்து வந்தான். தோல்வியைக் கையிலேந்தி, முகம் தொங்கி நின்றான். அவன் இறுதிக் கயிறுகள் அறுந்து கொண்டிருந்தன.

ப்ராக்ருதியின் உள்ளம் புரண்டது. அவள் வேண்டியது சுடரா? இந்தக் கறையா? அவள் கட்டுண்டது அன்புப் பண்பிலா? இந்த மங்கிய மையல் சாயையிலா? ஆனந்தன் தாழ்வு அவள் ஈனத்தை வெளிப்படுத்தியது. அவள் ஆசையின் சுயநலத்தையும் நாசப் பண்பையும் வெகுண்டாள். அவள் அர்ப்பணம் அவ

ளுக்கு புத்துயிர் கொடுத்த ஜோதியிடமே ஒழிய, அவள் முன் நின்ற வெட்கமும் வேட்கையும் சூழ்ந்த சடலத்திட மல்ல. அவனடியில் விழுந்து மன்னிப்பு வேண்டினுள்—
"தேவ, என்னை ரக்ஷிக்க வந்தாய். உன் வாட்டத்திற்கு என்னை மன்னி. நான் உன்னை மண்ணிற்கு இழுத்து வந்து விட்டேன். என்னைத் தூக்கித் கொண்டு வான கத்திற்கு மீள். என் பிரமையை உடைத்தாய். என்னை மன்னி."

மந்திர சக்தி மாண்டு தளர, ஆனந்தன் ஒளிமிக் கான், உயிர்ப்படைந்தான், பாடினுன்—

"சுத்த புத்தனே! கருணைக் கடலே!
மெத்த வித்தகா! மேனித் துயரின்
சத்த சங்க்ரகா! சரணம், சரணம்!"

UNIVERSITY EXTENSION LIBRARY
1 1 NOV 1964
★ MADURAI ★
Univ. Grants Commission